படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை (31.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 337

# பட்ஜெட்டில் நிவாரணம் இல்லையேல்

# மக்கள் போராட்டம் வெடிக்கும்!



## இப்படி எச்சரிக்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஒக்ரோபர் 31

இலங்கை அரசால் அடுத்தவாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குப் போதிய நிவாரணம் உள்ளடக்கப்படவில்லை.

மக்களுக்குப் பொருத்தமான அதிக நிவாரணங்களை உள்ளடக்கிய வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படாவிட்டால் நாடு முழுவதிலும் போராட்டம் வெடிக்கும். ஐக்கிய தேசியக் கட்சியே அந்தப் போராட்டத்தை (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிவிளாங்குளத்தில் படையினரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது - புலிகள்

கிளிநொச்சி, ஒக். 31

வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு படையினர் மேற்கொண்ட இருமுனை முன் நகர்வுகளை தாம் முறியடித்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாவது:-

வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஷெல் மற்றும் கனரக போர்க்கலங்களின் சூட்டாதரவுடன் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடா இப்போது முழுமையாக எங்கள் வசமாகிவிட்டது -இராணுவம்

கொழும்பு, ஒக். 31

மன்னார்- பூநகரி வீதியில் நேற்று மூன்று அணிகள் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையால் நாச்சிக்குடா முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நாச்சிக்குடாவை முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக படையினர் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அந்தப்பகுதியில் இடம் பெற்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

## நடிகர்களின் நாளைய உண்ணாவிரதப் போராட்டத்தில் 'மைக்' இன்றிப் பேசும் நிபந்தனையுடன் ரஜனி–கமல்!



ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நாளை சென்னையில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க ரஜினிகாந்தும் கமல்ஹாசனும் நிபந்தனையோடு சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்ணாவிரதத்தில் ஒலிவாங்கி (மைக்) வைத்து பேசக்கூடாது என்பதே அவர்களின் அந்த நிபந்தனை. சில மாதங்களுக்கு முன் ஒகேனக்கல் பிரச்சினை தொடர்பான உண்ணாவிரதத்தில் பங்கேற்ற நடிகர்கள் பலர், குறிப்பாக சத்தியராஜ் உணர்ச்சி வசப்பட்டு, கட்டுப்பாடில்லாமல் சில வார்த்தைகளைப் பிரயோகிக்க, (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி சென்று சேவையாற்ற தமிழக மருத்துவர்கள் தயார்!

### முதல்வரிடம் அனுமதி கோருகின்றது டாக்டர் சங்கம்

சென்னை, ஒக். 31

போதிய மருத்துவ வசதிகள் இன்றி அல்லலுறும் வன்னி மக்களுக்காக, அங்கு சென்று சேவையாற்றத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் என்று தமிழகத்தைச் சேர்ந்த 'சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்' என்ற அமைப்பு அறிவித்திருக்கிறது.

தாங்கள் வன்னிக்குச் சென்று மருத்துவப்பணி புரிவதற்குத் தமிழக முதல்வர் உரிய அனுமதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று அந்தச் சங்கம் கேட்டிருக்கிறது. இது தொடர்பாக அந்த டாக்டர்கள் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

இலங்கைத் தமிழர்கள் மீதான (16 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதில்லை என்று இந்தியாவிடம் கூறிய சில நாள்களில்

## விமான, பீரங்கித்தாக்குதல்கள் அனைத்தும் மக்களின் இலக்குகள் மீதே நடத்தப்படுகின்றன

கிளிநொச்சி, ஒக். 31

பொதுமக்களின் இலக்குகள் மீது தொடரும் படையினரின் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அரச வான்படையின் குண்டுவீச்சு விமானங்கள் திடீரென வள்ளிபுனம் வான் பரப்புக்குள் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் பிரவேசித்து கரித்தாஸ்-கியூடெக் நிறுவனங்களினால் நிர்மாணிக்

### புலிகளின் அரசியல்துறை கண்டனம்

கப்பட்ட மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான அகோரக் குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளன. இதன்போது ஒரு மாணவன் கொல்லப்பட்டும் எட்டுப் பேர் காயமடைந்தும் உள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்
உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது " மீண்டும் வாழ்வோம் ".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மெய்வன்மைச் சங்கத்தின் தடகளப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் யாழ். சென்றலில்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் மாவட்ட மட்டத்திலான தடகளப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறு நாளும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளில் 30 இற்கு மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

அன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார். (1)

# இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு, ஒக். 31

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள் ளது.

இன்றைய போட்டிகள் 14,16,18,20 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெறவுள்ளன. (1-86)

* * *

வலி வடக்கு, ஒக். 31

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட் டப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

லீக் முறையில் நடத்தப்படும் இச் சுற்றுப் போட்டியில் பன்னிரண்டு அணிகள் நான்கு குழுக்களாக பங்கேற்கின்றன.

இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் -**

* ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

* அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

* அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

**வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானம் -**

அராலி இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்யோசப் வித்தியாலயம்.

* சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழக்கலவன் பாடசாலை

* மாதகல் சென்யோசப் வித்தியாலையம் எதிர் தெல்லிப்பழை மகஜனக் கல்லூரி.

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழக் கலவன் பாடசாலை. (1-86)

* * *

வலி வடக்கு, ஒக். 31

யாழ். நகர் மைய றொட்டறக் கழகம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆண்கள், பெண்களுக்கான 3ஆம் இடத்திற்கான ஆட்டங்கள் இடம் பெறவுள்ளன. (1-86)

# ஆசிரியர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் 60 வீதம் வெற்றி என்று அறிவிப்பு

கொழும்பு, ஒக். 31

ஆசிரியர்கள் நேற்று நடத்திய சுகவீன விடுமுறைப் போராட்டம் 60 வீதம் வெற்றியடைந்துள்ளது என்று ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க நேற்றுத் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்துவைக்கக் கோரி நாம் நாடளாவிய ரீதியில் நடத்திய ஒருநாள் சுகவீன விடுமுறைப் போராட்டம் 60 வீதம் வெற்றியடைந்துள்ளது.

சில இடங்களில் நூறு வீத பகிஷ்கரிப்பும் இடம்பெற்றுள்ளது. சுமார் ஒருலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

நூறு வீத பகிஷ்கரிப்பு இடம்பெற்ற பாடசாலைகள் பல முற்றாக மூடப்பட் டிருந்தன.

இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தாவது எமது பிரச்சினையை நியாயமான முறையில் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த கட்டப் போராட்டம் முன்னெடுக்கப்படும். - என்றார். (சி)

## சாவகச்சேரி முன்பள்ளிகளுக்கு சத்துணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு மூன்று மாதங்களுக்கான பொருள்கள் நேற்று நகர சபையில் வழங்கப்பட்டன.

கடலை, அவல், ரவை, சீனி, பயறு, ஜீவாகாரம் ஆகிய சத்துணவுப் பொருள்கள் அந்தந்த முன்பள்ளி ஆசிரியைகளிடம் வழங்கப்பட்டன. 'போரூட்' நிறுவனத்தினால் இப் பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# கடல் தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நீச்சல் தடாகம் அமைக்க ஏற்பாடு

வண்ணார்பண்ணை, ஒக்.31

கடல்தொழில் அமைச்சால் யாழ்ப் பாணத்தில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி உதவிப்பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பாங்ஷால் வீதியில் முன்னர் கல்லூரி அமைந்திருந்த வளாகத்தை உதவிப் பணிப்பாளர் சகிதம் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் 512 ஆவது பிரிவைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஆகியோர் பார்வை இட்டனர்.

அமைக்கப்படவிருக்கும் நீச்சல் தடாகம் பொதுப் பாவனைக்கு என்றில்லாமல் யாழ். கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் நோக்கு இருப்பதால் மேற்படி வளாகம் அமைந்துள்ள காணி போதாமல் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

உத்தேசிக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கப் பொருத்தமான காணியை யாழ். நகரப் பகுதியில் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (1-160)

# திருத்தவேலை காரணமாக நாளை குடாநாட்டில் பகல் மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 31

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப் பின்னலில் அவசர திருத்த வேலை காரணமாக நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமையும் குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபை பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இருதினங்களும் காலை 8 மணி முதல் மாலை 5மணி வரை மின் தடை நடை முறையில் இருக்கும் என்றும் -

வேலைகள் துரிதமாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே மின் விநியோகம் வழங்கப்படும் என்று - மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை நூலக சங்கத்தால் நடத்தப் படவிருக்கும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம் 11, பகுதி- 1ற்கான மீள் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை சனிக்கிழமை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். நிலைய இணைப்பாளர் திருமதி ல.உமா சங்கர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை டிசம்பர் மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (1)

## 35 பெண்களுக்கு வலைதிருத்தல் பயிற்சி

வண்ணார்பண்ணை, ஒக். 31

யாழ். கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி போதனா ஆசிரியர்களால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் அப்பகுதியைச் சேர்ந்த 35 பெண்கள் வலை திருத்தல் பயிற்சி நெறியைப் பெற்று வருகின்றனர்.

பத்து நாள்கள் கொண்ட இப் பயிற்சி நெறி கடந்த 20ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-160)

## கட்டுவன் புலம் ம.வி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 31

தெல்லிப்பழை, கட்டுவன்புலம் மகா வித்தியாலைய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலநாதனும் சிறப்பு விருந்தினராக வித்தியாலயத்தின் முன்னாள்அதிபர் சி.சந்திரகுமாரும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபருமான ஆறு.திருமுருகனும், நிறுவுநர் நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற அரச கணக்காய்வாளர் சி.கந்தசாமியும் நிகழ்த்துவர். (1)

# மரண அறிவித்தல்கள்

## நாகேந்திரம் இராமலிங்கம்

சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் இராமலிங்கம் 29.10.2008 அன்று வற்றாப்பளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி, சுரேஸ்குமார், இராசமலர், சிறிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற நடராஜா, இராசா(கனடா), இராசலட்சுமி, நவரத்தினம், காலஞ்சென்ற கணேசராஜா மற்றும் சிவகுருநாதன், செல்லம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணி(கனடா), நவரட்ணம், சோதிராணி, விக்னேஸ்வரி காலஞ்சென்ற ரேணுகாதேவி மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுப்பிரமணியம், ரவிவண்ணன் (ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),கௌசி, நந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.10.2008) வியாழக்கிழமை வற்றாப்பளையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ரவிவண்ணன்
(மருமகன்).

சண்டிலிப்பாய். (79563)

## சின்னத்துரை திரேசம்மா(மனோன்மணி)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை திரேசம்மா(மனோன்மணி) நேற்று (30.10.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ்-செல்லம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் பாசமிகு மனைவியும், தங்கத்துரை(பத்திரிகைக் காரியாலயம், வலம்புரி), கீதா, றதா, ஜெயசீலன்(நோர்வே), விஜயசீலன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசஞானம்(ஆசிரியை, Kilner Nursery), இன்பராஜா(கணக்காளர்), ஜீவா, றெஜி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, அழகரட்ணம், பூபாலசிங்கம் மற்றும் குமார்(லண்டன்), அருள்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரூஜன்(World Vision), டிலக்ஷன், பானுரேகா(கனடா), பிரவீன், பிரசாத் (மாணவன் St.Patricks College), டில்றுக்ஷன், டில்ஷான், டித்ரிக், வியோலன், ஜெயோன், எறிக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பெர்னாண்டோ, செபஸ்தியாம்பிள்ளை மற்றும் பூமலர், அமராவதி ஆகியோரின் மைத்துனியும், பயஸ், அருட்தந்தை எயின்சிலி றொஷான், தர்ஷிக்கா, நிஷாந்தன் ஆகியோரின் பெரியதாயாரும், அழகேஸ்வரன், அழகேஸ்வரி, அழகுநாயகி, அழகுராணி, அழகுரேவதி, அழகேந்திரன், சுரேஸ், ரமேஸ், சாந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.11.2008) சனிக்கிழமை மாலை 3மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.அ.தங்கத்துரை
(மகன்).

"மனோஸ்தான்"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (79562)


## கண்ணீர் அஞ்சலி

We Serve

எமது அரிமாக்கழகத்தின் முன்னாள்
தலைவரும் உறுப்பினருமான
லயன் பொ.அருணகிரிநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அருணாசலம் பொன்னம்பலம்**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
பிராந்தியத் தலைவர்,
வலயத் தலைவர்.

'சர்வதேச அரிமாக் கழகம்,
திவகம். (79564)

## வீடு வாடகைக்குத் தேவை

அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலை இயங்குவதற்காக யாழ் பிரதேச செயலகப்பிரிவில் போக்குவரத்து உள்ள பிரதான வீதிகளில் அமைந்துள்ள, சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது.

பிரதான வீதி, கொட்டடி பகுதிகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- கணக்காளர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 2226253 (P-555149)

## வீடு வாடகைக்கு உண்டு

அம்மன் வீதி, கந்தர்மடத்தில் மாடி வீட்டின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்பு:- ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சனிக்கிழமைகளில் மட்டும்)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Bahira புறொயிலர் குஞ்சுகள்,
01.11.2008 மாலை
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
[illegible]
[illegible]
ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேச அவதானிப்புக் குழு இலங்கைக்குத் தந்த சான்றிதழ்

இலங்கையில் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை, படுகொலைகள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், தொந்தரவுகள் போன்றவை மேலும் மோசமாகத் தொடர்கின்றன என சர்வதேச ஊடக சுதந்திரத்துக்கான தூதுக்குழு தெரிவித்திருக்கின்றது.

ஊடகவியலாளர்களின் சர்வதேச சம்மேளனம், சர்வதேச ஊடக ஆதரவு அமைப்பு, சர்வதேச செய்திப் பாதுகாப்பு நிறுவனம், சர்வதேச ஊடக நிறுவனம், எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு ஆகிய ஐந்து பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளே இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்து இங்கு ஐந்து நாள்கள் தங்கி நிலைமைகளை அவதானித்த பின்னர், தமது விஜயத்தை ஒட்டி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு இலங்கையின் ஊடக நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

• கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கைக்கு வந்து இங்கு ஊடக நிலைமைகளை அவதானித்த இதே குழுவினர், இப்போது சுமார் ஒன்றேகால் வருடத்தின் பின்னர் திரும்பவும் வந்து நிலைமைகளை அவதானித்துக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஊடக சுதந்திர நிலைமை கடந்த வருடத்தில் இருந்ததை விடவும் இப்போது மிகவும் மோசமடைந்திருப்பதைத் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ள அவர்கள், ஊடக அடக்குமுறை விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது எனக் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

உலக நாடுகளில் ஊடக சுதந்திரத்தின் நிலைமை தொடர்பாக எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு அண்மையில் வெளியிட்ட சுட்டெண் காட்டியின்படி இலங்கை மிகவும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, உலகளாவிய ரீதியில் ஜனநாயக நாடுகளில் மிக மோசமாக ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக்கும் தேசமாக அடையாளம் காணப்பட்டிருப்பதையும் ஊடக சுதந்திரத்துக்கான சர்வதேச தூதுக்குழு தனது இப்போதைய அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதி, ஊடகவியலாளர்களின் துயரங்களை ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், ஊடகங்களின் உரிமையாளர்கள், ஊடகங்களின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், ஊடகத் தொழிலாளர்கள், மனித உரிமைகள் மற்றும் சட்ட விடயங்களின் நிபுணர்கள், இலங்கையில் உள்ள சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் ஆகிய பலரையும் தனித்தனியாகவும், கூட்டாகவும் சந்தித்து, இங்கு ஊடக சுதந்திரத்தின் நிலைமை குறித்து அவர்களிடம் கேட்டறிந்து, நேரடியாகப் பார்வையிட்ட பின்னரே மேற்படி அவதானிப்பு அறிக்கையை ஊடக சுதந்திரத்துக்கான சர்வதேசக்குழு வெளியிட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காக இலங்கையில் உள்ள ஊடகவியலாளர்களின் ஐந்து அமைப்புகள் ஒன்றுபட்டு ஐக்கியமாக - எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ள ஊடக சுதந்திரத்துக்கான சர்வதேசத் தூதுக்குழு, மேற்படி ஊடகவியலாளர்களுக்கு எதிராக அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஊடக உரிமையாளர்களும் ஆசிரியர்களும் ஐக்கியமாக வெளிப்படுத்திவரும் எத்தனங்களுக்குத் தங்களின் முழு ஆதரவையும் வழங்குவதாகவும் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்காகப் பாடுபடும் சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக ஊழியரின் தொழிற்சங்கங்கள் சம்மேளனம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம், இலங்கை முஸ்லிம் மீடியா பேரம் ஆகியவையே கடும் சவாலான சூழ்நிலையையும் எதிர்கொண்டபடி ஊடக சுதந்திரத்துக்காக இங்கு நன்கு பணியாற்றி வருகின்றன என சர்வதேசத் தூதுக்குழு தெரிவித்திருக்கின்றது.

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகம், பி.யஸீகரன், வி.வளர்மதி ஆகியோர் கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறித்தும் -

ஊடகவியலாளர் ஒருவரின் எழுத்துக்காக அவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நேரடியாகப் பாயும் அளவுக்கு நிலைமை முதல் தடவையாக இலங்கையில் மோசமடைந்திருப்பது பற்றியும் -

இந்த சர்வதேச தூதுக்குழு கவலையும், விசனமும், வேதனையும் தெரிவித்திருக்கின்றது.

ஊடக சுதந்திரம் என்ற விடயம் ஒரு ஜனநாயக நாட்டில் மிகப் பிரதான அடிப்படை உரிமையாகும். கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரத்தின் பிரதான அங்கமே சுயாதீன ஊடகக் கட்டமைப்பாகும்.

அடிப்படை உரிமைகளை மறுத்து அராஜக ஆட்சி கட்டவிழும் ஒரு தேசத்தில் முதலில் உயிரிழப்பது ஊடக சுதந்திரம்தான்.

இலங்கையிலும் ஊடக சுதந்திரம் அத்தகைய இறுதிக் காலத்தை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதையே சர்வதேச அவதானிப்புக் குழுவின் கண்காணிப்பு அறிக்கை தெளிவுபடுத்தி உறுதிப்படுத்துகிறது.

சமத்துவமும் சமரசமும் பேணப்படும் ஒரு ஜனநாயக நாட்டின் ஆட்சிப் பீடம் என்று தன்னைக் காட்டிக்கொண்டு, கொழும்பு, சர்வதேசத்திடம் உதவி வேண்டி பிச்சைகேட்கும் இன்றைய நிலையில், கொழும்பு அரசின் தராதரம் குறித்துத் தீர்மானித்து முடிவு செய்ய இந்தத் தூதுக்குழுவின் அறிக்கை - சான்றிதழ் - சர்வதேச சமூகத்துக்கு நன்கு உதவும். அதைக் கவனத்தில் எடுக்குமா சர்வதேச சமூகம்........?

# ஆசிரியர்களின் சுகவீன லீவுப் போராட்டத்தால் யாழ்ப்பாணப் பாடசாலைகளும் செயலிழந்தன

யாழ்ப்பாணம்,ஒக்.31

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து ஆசிரியர் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று வியாழக்கிழமை முன்னெடுத்த சுகவீன லீவுப் போராட்டத்தில் யாழ்.மாவட்ட ஆசிரியர்களும் பங்குகொண்டனர். இதனால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் செயலிழந்தன.

சுகவீன லீவுப் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு ஆசிரியர் சங்கங்கள் விடுத்த கோரிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கமும் பூரண ஆதரவு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் நேற்றுப் பணிக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் பாடசாலைகள் வெறிச்சோடின.

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் சமுகமளிக்காமையால் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. பெரும்பாலான பாடசாலைகளுக்கு நேற்று மாணவர்களும் சமுகமளிக்கவில்லை. சில பாடசாலைகளுக்கு வருகைதந்த குறைந்த எண்ணிக்கையான மாணவர்களும் ஆசிரியர்கள் வருகை தராமையால் உடனடியாகவே வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் நேற்றுப் பணிக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளும் நேற்று இயங்க வில்லை. சில பாடசாலைகளின் பிர தான வாயில்கள் மூடப்பட்டிருந்தமையால் பாடசாலைக்கு வந்த ஒருசில மாணவர்களும் வீடுகளுக்குத் திரும்பி னார்கள்.

ஆசிரியர்களின் சுகவீன லீவுப் போராட்டத்தினால் குடாநாடு பூராகவும் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறவில்லையென எமது பிரதேசச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

(50-29-302-11-86-131)



வெறிச்சோடி இருக்கும் வகுப்பறையும், பாடசாலை முகப்பும்

# வலி.கிழக்கில் பரீட்சார்த்த சேதனப் பசளைத் திட்டம் வெற்றி

கோப்பாய்,ஒக்.31

வலி.கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் தலைமைப் பணிமனையில் சேதனப் பசளையைத் தயாரிக்கும் பரீட்சார்த்தத் திட்டம் வெற்றியளித் துள்ளது.

பிரதேச சபையின் பல்வேறு பகுதிகளிலும் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்களிலிருந்தே இச்சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது.

உற்பத்தி செய்யப்படும் பசளை முதற்கட்டமாக மூலிகைத் தோட்டப் பராமரிப்பிற்கும் பல்வேறு பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்படுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் சேதனப் பசளையைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டது. (202-72)

# கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு சமையலறை

யாழ்ப்பாணம்,ஒக்.31

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய சமையலறை இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

'லீட்ஸ்' நிறுவனம் இந்நிதியினை வழங்கியுள்ளதாக அதிபர் ச.ஞானலிங்கம் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு உணவு தயாரிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகையே களஞ்சிய அறை மற்றும் சமையலறையாக மாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# தென்மராட்சி மாணவர்களுக்கு வாசிப்பு வாரப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.31

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி யாழ்.நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினர் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் வாசிப்பு வாரப் போட்டிகளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளனர்.

பேச்சுப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ஏனைய போட்டிகள் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இப்பாடசாலைகளில் கலந்துகொள்ளலாமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

# வலி.கிழக்கில் வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

கோப்பாய், ஒக்.31

வலி.கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால்களை மதகுகான்கள் ஆகியவை வெட்டி துப்புரவு செய்யும் பணிகளை பிரதேசசபையினர் ஆரம்பித்துள்ளனர்.

மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் மேற் படி பணிகள் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன. இதனால் வெள்ள நீர் தேங்காமல் வழிந்தோடுவதுடன் சிறு ஒழுங்கைகளில் போக்குவரத்து சிரமமின்றி மேற்கொள்ள முடிகிறது என பொது மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 16 | 01.11.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 09.46 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | பி.இ.03.59 வரை |
| சதுர்த்தி விரதம் | |
| சுபநேரம் : | 03.04–04.34 |
| ராகுகாலம் : | 09.04–10.34 |

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.31

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தினமும் மாலை 4 மணிக்கு கந்தசஷ்டி சிறப்புச் சொற்பொழிவை நேற்றுமுன்தினம் தொடக்கம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்றது.

இந்த நிகழ்வு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை சைவப் புலவர் நா.நவராஜ் "நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (204)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.31

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சிப் பிரிவினரும் தென்மராட்சிக் கல்வி வலயத்தினரும் இணைந்து நடத்திய சாரணர் கலைக்கூறு I பயிற்சியில் கலந்துகொண்ட சாரணத் தலைவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை சின்னம் சூட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வு கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெறுமென மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 25, 26, 27 ஆகிய திகதிகளில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடத்தப்பட்ட பயிற்சியில் பங்குபற்றியோருக்கும் ஏற்கனவே பயிற்சிபெற்று சின்னம் சூட்டப்படாதவர்களுக்கும் சின்னம் சூட்டப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த மார்ச் மாதம் முதல் இடம்பெற்றிருந்த முன்பள்ளிக்கல்வி, அடிப்படை ஆங்கிலம், மனித உரிமைகளும் சமூக உரிமைகளும் ஆகிய கற்கை நெறிகளைப் பயின்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கற்கைநெறியைப் பூரணப்படுத்தியோருக்கு சான்றிதழ்களை வழங்கவுள்ளார்.

மேற்படி மூன்று கற்கைநெறிகளைப் பயின்றவர் அனைவரையும் நிகழ்வுக்கு வருகை தரும்படி இணைப்பாளர் கேட்டுள்ளார். (204)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.31

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர், வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நாளை மறுதினம் காலை 8 மணி தொடக்கம் பகல் ஒரு மணி வரை நடத்தவுள்ளனர்.

கண், பல், நீரிழிவு, இரத்த அழுத்தம், சர்மரோகம், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன என கழகச் செயலாளர் லயன் ஏ.எஸ். செந்தூரன் அறிவித்துள்ளார். (202-207)

* * *


யாழ்ப்பாணம், ஒக்.31

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆத்மீக நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ்.கே.என்.தவராஜா பகவத்கீதை உபந்நியாசம் நிகழ்த்தவுள்ளார். (204)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பீரும் லக்ஷ்மனும் இரட்டைச் சதம் விளாச முதல் இன்னிங்ஸில் இந்தியா 613 ஓட்டங்கள்!



இரட்டைச் சதம் பூர்த்தி செய்த கௌதம் கம்பீரை வாழ்த்தும் ஆஸி. அணியின் வேகப் பந்துவீச்சாளர் பிரெட் லீ.

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் டில்லியின் கோட்லா மைதானத்தில் நடைபெற்றுவரும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் கௌதம் கம்பீரும் வி.வி.எஸ். லக்ஷ்மனும் அதிரடியாக இரட்டைச் சதம் குவிக்க, அந்த அணி மிகவும் வலுவான ஓட்ட எண்ணிக்கையை எட்டியது. இரண்டாம் நாள் ஆட்டத்தை நேற்றைய தினம் தொடர்ந்த இந்திய அணியின் கௌதம் கம்பீர், வி.வி.எஸ். லக்ஷ்மன் ஆகியோர் மிகவும் சிறப்பான முறையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

நேற்றைய இரண்டாம் நாளில் கம்பீர் 149 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 54 ஓட்டங்களுடனும் தமது ஆட்டத்தை ஆரம்பித்தனர். இவ்விருவரும் தமது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த இந்திய அணி ஸ்திரமான நிலையை அடைந்தது. ஆஸி. அணியின் பந்துவீச்சாளர்கள் இவ்விருவருடனும் தமது முழுப் பலத்துடன் போராடினர்.

இருவரும் தமக்கிடையே 278 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்துகொண்டனர். இந்நிலையில் தனது இரட்டைச் சதத்தைப் பூர்த்திசெய்திருந்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கம்பீர் 206 ஓட்டங்களுடன், வட்சனின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம்புகுந்தார் சௌரவ் கங்குலி. எனினும் அவர் அதிக நேரம் நிலைத்திருக்கவில்லை. 5 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த கங்குலி கடிச் வீசிய பந்தில் பொண்டிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த லக்ஷ்மனுடன் இணைந்துகொண்டார் டோனி. அவரும் குறைந்தளவு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த டோனியை பெவிலியன் திருப்பினார் வட்சன்.

நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடிக்கொண்டிருந்த லக்ஷ்மனுடன் கூட்டுச் சேர்ந்தார் அணித் தலைவர் அனில் கும்ளே. இவர் லக்ஷ்மனுடன் சேர்ந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த நிலையில் தனது அரைச் சதத்தை 5 ஓட்டங்களால் தவறவிட்டு 45 ஓட்டங்களுடன் ஜோண்சனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கியவர் சகீர்கான். இவர் தனது அதிரடியான துடுப்பாட்டத்தை ஆரம்பம் முதலே வெளிப்படுத்தினார். இவரது ஒத்துழைப்புடன் தனது இரட்டைச் சதத்தைத் தொட்டார் லக்ஷ்மன். இவரது இரட்டைச் சதத்தைத் தொடர்ந்து இந்திய அணி தனது இன்னிங்ஸை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இன்னிங்ஸ் இடைநிறுத்தப்படும்போது இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 613 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சகீர்கான் 28 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 200 ஓட்டங்களுடனும் இருந்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸுக்காக களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மூன்றாம் நாள் ஆட்டம் இன்று தொடரும். (த)




## சாதனைத் துளிகள்....

★ இந்திய வீரர் கௌதம் கம்பீர் நேற்று முன்தினம் சிக்ஸர் அடித்து தனது சதத்தை பூர்த்தி செய்தார். டெஸ்டில் இந்திய வீரர் சிக்ஸர் விளாசி சதத்தை எட்டுவது இது 11ஆவது சந்தர்ப்பமாகும், இதில் டெண்டுல்கர் மட்டும் 4 முறை இந்த சிறப்பைப் பெற்றிருக்கிறார்.

★ மொஹாலி டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் சதம் அடித்த கம்பீர், டில்லி டெஸ்டின் முதல் இன்னிங்ஸிலும் சதம் எடுத்துள்ளார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அடுத்தடுத்து 2 இன்னிங்ஸில் சதம் அடித்த 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன்பாக 1947-48ஆம் ஆண்டு அடிலெய்டில் நடந்த டெஸ்டில் இந்தியாவின் விஜய் ஹசாரே இரண்டு இன்னிங்ஸிலும் (116 மற்றும் 145 ஓட்டங்கள்) சதம் அடித்திருக்கிறார்.

★ டெண்டுல்கர் நேற்று முன்தினம் தனது 51ஆவது அரைச் சதத்தை எட்டினார். தவிர டெஸ்டில் அவர் 39 சதங்களும் விளாசி இருக்கிறார். இதன் மூலம் அவர் 90 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து, அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் அலன் போர்டரின் (63 அரை சதம், 27 சதம்) சாதனையை சமன் செய்துள்ளார்.

★ டெண்டுல்கர்-கம்பீர் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் சேர்த்தது. டெண்டுல்கர் இன்னொரு வீரருடன் சேர்ந்து 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்ப்பது இது 68ஆவது முறையாகும். இதன் மூலம் அவர் ரிக்கிபொண்டிங்கின் சாதனையை (அவரும் 68 சதம் பெற்ற இணைப்பாட்டம்) சமன் செய்துள்ளார். இந்தச் சாதனையில் அதிகபட்சமாக ராகுல் டிராவிட் மற்றொரு வீரருடன் இணைந்து 72 முறை இணைப்பாட்டமாக சதம் பெற்றிருக்கிறார்.

★ நேற்றைய போட்டியில் களம் இறங்கிய இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகவும் அனுபவம் வாய்ந்த அணியாக கருதப்படுகிறது. அணியில் இடம் பெற்றுள்ள டெண்டுல்கர் 153 டெஸ்ட்களும், கும்ளே 132 ஆட்டங்களும், டிராவிட் 128 ஆட்டங்களும், கங்குலி 112 ஆட்டமும், லக்ஷ்மன் 99 ஆட்டங்களும் விளையாடியுள்ளனர்.

# அனுபவ வீரர்கள் இல்லாத நிலையில் சைமண்ட்ஸை நீக்கியது குறித்து மூடி ஆச்சரியம்

மெல்போர்ன், ஒக். 31

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் சகலதுறை வீரர் ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் இடம் பெறாதமை தனக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளதாக மேற்கு அவுஸ்திரேலியாவின் பயிற்சியாளரான ரொம் மூடி தெரிவித்திருக்கிறார்.

மேலும், உலக கிரிக்கெட்டில் அவுஸ்திரேலிய அணி தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட திணறும் இந்த வேளையில் சைமண்ட்ஸ் அணியில் இடம் பெறாதமை புரியாத புதிராக இருப்பதாகவும், இதற்கு மீன்பிடிக் கதை தவிர வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்றும் மூடி கூறியிருக்கிறார்.

அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகளுக்கு இடையே நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது. 2 டெஸ்ட் போட்டிகள் முடிந்த நிலையில் இந்திய அணி 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

மொஹாலி டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 320 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இது அந்த அணிக்கு பெரிய பின்னடைவை அளித்தது. எனவே 3 ஆவது டெஸ்டில் சகலதுறைவீரர் சைமண்ட்ஸ் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சைமண்ட்ஸ் விசாப் பிரச்சினையால் இந்தியா வருவது தாமதமாகிறது என்று முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன. பின்பு சைமண்ட்ஸ் இந்தியா வரமாட்டார் என்ற தகவல் உறுதியானது.

சைமண்ட்ஸின் துடுப்பாட்டம் நன்றாக உள்ளது. தவிர அவரது சுழற்பந்துவீச்சும் ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்குக் கடந்த காலங்களில் உதவியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும், இந்தியாவுக்கு எதிரான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரரான ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் இடம் பெறாதமை தமக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளதாக ரொம் தெரிவித்திருக்கிறார்.

''கடந்த ஒகஸ்ட் மாதம் பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தின் போது டார்வின் நகரில் நடைபெற்ற அணியின் விவாதக் கூட்டத்திற்குச் செல்லாமல் சைமண்ட்ஸ் மீன் பிடித்துக் கொண்டிருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு பாதியிலேயே நாடு திரும்பினார்.

இது மட்டுமே காரணமாக இருக்கும் பட்சத்தில் சைமண்ட்ஸிற்கு அபராதம் விதித்திருக்கலாம். ஆனால் இதை விடப் பெரிய காரணம் ஏதாவது இருக்கலாம். எனவேதான் அவர் குவீன்ஸ்லாந்து அணிக்காக ஆடுகிறார். அவுஸ்திரேலிய அணிக்காக ஆடவில்லை'' என்று ரொம் மூடி மேலும் கூறினார்.

## வட்சன்- கம்பீர் முறுகல்

அவுஸ்திரேலிய சகலதுறை ஆட்டக்காரர் ஷேன் வட்சன், இந்திய வீரர் கௌதம் கம்பீர் ஆகியோரிடையே நேற்று முன்தினம் மைதானத்தில் சிறிய முறுகல் ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது. தேநீர் இடைவேளைக்கு முன்பாக வட்சன் 51ஆவது ஓவரை வீசியபோது, கம்பீர் பந்தை தட்டிவிட்டு ஓட்டம் எடுக்க முனைந்தார். அப்போது வட்சன் கூறிய வார்த்தையால் கடுப்படைந்த கம்பீர் அவரைக் கடுமையாக முறைத்தார் என்று கூறப்பட்டது. இந்தச் சம்பவத்தை அடுத்து, ஐ.சி.சி. நடத்தை விதிமுறைகளை மீறினார் என கம்பீர் மீது புகார் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆட்டத்தின் 18ஆவது ஓவரை வட்சன் வீசியபோது, துடுப்பெடுத்தாடிய கம்பீருக்கு வெகு அருகே சென்று வெறுப்பேற்றினார் என்றும், அதற்குப் பதிலடியாகவே கம்பீர் தனது வெறுப்பை பின்னர் வெளிப்படுத்தியதுடன் வட்சனின் பந்துவீச்சில் சிக்ஸர் அடித்து சதத்தை பூர்த்தி செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

# செஸ் நாயகன் ஆனந்த் மீண்டும் உலக சம்பியன்!

செஸ் உலகின் மன்னன் என்பதை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் மீண்டும் ஒரு முறை நிரூபித்தார். ரஷ்ய வீரர் விளாடிமிர் கிராம்னிக்கை வீழ்த்தி உலக சம்பியன் பட்டத்தை ஆனந்த் தட்டிச் சென்றார்.

ஜேர்மனியின் பான் நகரில் உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. 12 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் 'கிராண்ட் மாஸ்டர்' விஸ்வநாதன் ஆனந்த், விளாடிமிர் கிராம்னிக்கைச் சந்தித்தார். ஆரம்பத்தில் இருந்தே அசத்தலாக ஆடிய ஆனந்த், ஒவ்வொரு சுற்றிலும் வெற்றிநடை போட்டார். இதையடுத்து இவர் 11வது சுற்றில் சமன் செய்தாலே சம்பியன் பட்டம் வெல்லலாம் என்ற நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு நடந்த பரபரப்பான 11ஆவது சுற்று ஆட்டத்தில் மிகுந்த கவனத்துடன் காய் நகர்த்தினார் ஆனந்த். இப்போட்டியில் வெள்ளைக் காய்களுடன் விளையாடிய இவர் 24ஆவது நகர்த்தலில் 'சமன்' செய்து அசத்தினார். ஆனந்த் 6.5 புள்ளிகளுடன் உலக சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார். கிராம்னிக்கால் 4.5 புள்ளிகள் மட்டுமே பெற முடிந்தது. கடந்த ஆண்டு உலக சம்பியன் பட்டம் வென்ற ஆனந்த், மீண்டும் ஒருமுறை சாதித்துக் காட்டியுள்ளார்.

உலக சம்பியன் பட்டம் வென்ற ஆனந்த், பாராட்டு மழையில் நனைகிறார். இவரது தந்தை விஸ்வநாதன் கூறுகையில், ''கடந்த சில நாள்களாக குடும்பத்தில் உள்ளவர்கள் மிகுந்த பரபரப்பாக இருந்தோம். தற்போது ஆனந்த் சம்பியன் பட்டம் வென்று விட்டதால் நிம்மதியாக இருக்கிறோம். தனிநபராகப் போராடி வெற்றி பெற்றுள்ளார்'' என்றார். ஆனந்த் மனைவி அருணா கூறுகையில், ''தனது பணியை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளதாக ஆனந்த் [illegible] என்றார்.

இந்த வெற்றி குறித்து ஆனந்த் கூறியதாவது:-

3ஆவது முறையாக உலக சாம்பியன் பட்டம் பெற்றது பெருமை அளிக்கிறது. மிகச் சிறந்த சாதனையாக கருதுகிறேன். 3 சம்பியன் பட்டத்தையும் ஒரே மாதிரியாகவே கருதுகிறேன். 6ஆவது சுற்று முடிவில் நான் 3 புள்ளிகள் முன்னிலையில் இருந்தேன். கிராம்னிக் 3 சுற்றில் தோற்றதால் எளிதில் பட்டம் பெற முடியும் என்ற நம்பிக்கை இருந்தது.

11ஆவது சுற்றில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடியதால் சமநிலை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்தது.

இவ்வாறு அவர் கூறினுர்.

சம்பியன் பட்டம் பெற்ற ஆனந்துக்கு ரூ.5 கோடி பரிசு வழங்கப்பட்டது. முந்தைய போட்டிகளின்படி கிராம்னிக்கு இதே பரிசு தொகை கிடைத்தது.




### ஆனந்த்- ஒரு பார்வை

உலகின் முதல்தர செஸ் வீரர் என்பதை சென்னையைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் மீண்டும் நிரூபித்து விட்டார். ரஷ்ய வீரர்களின் ஆதிக்கத்தைத் தகர்த்து அவர் 3ஆவது முறையாக உலக சம்பியன் பட்டத்தை பெற்று பெருமை சேர்த்துள்ளார். 1969ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதி பிறந்தார். அவர் பெற்ற சாதனை விவரம்:-

- ★ 1983 ஆம் ஆண்டு தேசிய சப்-ஜுனியர் பட்டம் பெற்றார். அப்போது அவருக்கு வயது 14.
- ★ 1984 ஆம் ஆண்டு சர்வதேச மாஸ்டர் ஆனார்.
- ★ 1985 ஆம் ஆண்டு தேசிய சாம்பியன் பட்டம் பெற்றார்.
- ★ 1987ஆம் ஆண்டு உலக ஜுனியர் சம்பியன்.
- ★ 1988 ஆம் ஆண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றார்.
- ★ 2000 ஆம் ஆண்டு பீடே உலக சம்பியன்.
- ★ 2003 ஆம் ஆண்டு பீடே உலக ரேபிட் சம்பியன்.
- ★ 2007 ஆம் ஆண்டு உலக பீடே சம்பியன்.
- ★ 2008 ஆம் ஆண்டு பீடே உலக சம்பியன்.

### ஆனந்த் பெற்ற விருதுகள் வருமாறு:-

- ★ 1985 ஆம் ஆண்டு அர்ஜுனா விருது.
- ★ 1987 ஆம் ஆண்டு சோவியத் லேண்ட் நேரு விருது.
- ★ 1987 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது.
- ★ 1987 ஆம் ஆண்டு தேசிய சிட்டிசன்ஸ் விருது.
- ★ 1991-92-இல் ராஜீவ்காந்தி கேல்ரத்னா விருது.
- ★ [illegible]இல் கே.கே. பிர்லா விருது.
- ★ செஸ் ஆஸ்கார் விருதை 1997, 1998, 2003, 2004, 2007ஆம் ஆண்டுகளில் பெற்றார்.
- ★ 1995ஆம் ஆண்டு பத்மவிபூசன் விருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இல்லங்களில் வாழ்ந்த 145 பிள்ளைகள் குடும்பங்களுடன் மீளவும் இணைக்கப்பட்டனர்

## சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.31

சிறுவர் இல்லங்களில் வாழ்ந்த 145 பிள்ளைகள் அவர்களது குடும்பங்களுடன் மீள இணைக்கப்பட்டனர்.

'குழந்தைகளுக்குப் பொருத்தமான சூழல் குடும்பச் சூழலே' என்னும் தொனிப் பொருளில் சிறுவர் நன்னடத்தைத் திணைக் களம் சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளை களை அவர்களது குடும்பங்களுடன் இணைக்கும் செயற்றிட்டத்தை மேற் கொண்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவ னத்தின் அனுசரணையுடன் செயற்ப டுத்தப்படும் மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த வருடம் ஜூன் மாதம் தொடக்கம் இவ்வருடம் மார்ச் மாதம் வரை 145 பிள்ளைகள் அவர்களது குடும்பங்ளுடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் 17 பிள்ளைகளும், சங் கானையில் 14 பிள்ளைகளும், வேலணை யில் 3 பிள்ளைகளும், யாழ்ப்பாணத்தில் 12 பிள்ளைகளும், தெல்லிப்பழையில் 7 பிள்ளைகளும், நல்லூரில் 8 பிள்ளை களும், கோப்பாயில் 31 பிள்ளைகளும்-

உடுவிலில் 14 பிள்ளைகளும், சண்டி லிப்பாயில் 17 பிள்ளைகளும், நெடுந் தீவில் 7 பிள்ளைகளும், ஊர்காவற்றுறையில் 4 பிள்ளைகளும் கரவெட்டியில் 3 பிள் ளைகளும், பருத்தித்துறையில் 1 பிள்ளையும், காரைநகரில் 7 பிள்ளைகளும் அவர்களது குடும் பங்களுடன் மீள இணைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு கற்றல் உபக ரணங்கள், சைக்கிள் என்பனவும் வழங் கப்பட்டுள்ளன. அத்துடன் பிள்ளைகளின் பெற்றோருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மீளிணைக்கப்பட்ட பிள்ளைகள் தொடர் பாக ,சிறுவர் நன்னடத்தைத் திணைக் களம் அலுவலர்கள் மூலம் பிரதேச ரீதி யாகத் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவ டிக்கை கள் மேற்கொள்ளப்படும் என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

வறுமை காரணமாகச் சிறுவர் இல்லங் களில் தமது பிள்ளைகளை அனுமதிக்கப் பெற்றோர் முயற்சிக்கின்றனர்.

அவ்வாறான நிலைமையை மாற்றி பிள்ளைகளுக்கு நல்லதோர் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது பிரதான கடமை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (202)

## வலி.கிழக்கு பிரதேச சபையில் மூலிகைத் தோட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.31

வலி.கிழக்கு பிரதேசசபையின் தலை மைப் பணிமனையில் மூலிகைத் தோட் டம் அமைக்கப்பட்டு பல்வேறு மூலிகை கள் பராமரிக்கப்படவுள்ளன.

இதற்கான முதற்கட்டப் பணிகள் நிறை வடைந்துள்ளன.

மூலிகை வகைகள் சேகரிக்கப்பட்டு நாட்டப்படுவதாகவும் இதன் மூலம் மூலிகைகளின் முக்கியத்துவத்தைப் பொது மக்களுக்குத் தெரியவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த பிரதேசசபையின் கீழ் இயங்கும் இலவச சித்த மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கும் இந்த மூலிகைகள் வழங்கப்பட்டு வருவ தாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரி வித்தன. (202-72)

## வன்னி மக்களின் அவலம் தீர உபவாசமும் செபமாலையும்

யாழ்ப்பாணம், ஒக்.31

நாட்டில் அமைதி வேண்டியும் வன்னி மக்களின் அவலங்கள் தீரப் பிரார்த்தித்தும் கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆல யத்தில் இன்று வெள்ளிக்கிழமை உபவா சமும் செபமாலையும் இடம்பெறவுள்ளன.

கடந்த 40 நாள்களாக நடத்தப்பட்டு வந்த தொடர் செபமாலை இயக்கத்தின் கடைசி நாளான இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை உபவாசத் துடன் செபமாலை ஓதுதலும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும். (202)

## ஆராய்ச்சியாளர் பதவிகளில் நியமிக்குமாறு யாழ்.விவசாயக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.31

விதை தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர் பதவிகளில் தமக்கும் வாய்ப்பு வழங் குமாறு யாழ்.விவசாயக் கல்லூரியின் பழைய மாணவர்கள், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

யாழ்.மருதனார்மடம் விவசாயக் கல் லூரியில் படித்துப் பட்டம் பெற்ற மாண வர்கள் விவசாயத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள விதை தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர் பதவிகளுக்கு விண்ணப் பித்துள்ளனர்.

இந்த நிலையில் தங்களுக்கு அப்பதவி களைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, பேராதனை விவசாயத் திணைக்களப் பணிப் பாளருடன் தொலைபேசி மூலம் உடனடி யாகத் தொடர்பு கொண்டு கலந்துரையாடி யுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இவ்விடயம் தொடர்பில் உரிய நடவ டிக்கைகளை தாம் மேற்கொள்வார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (202)




## பயிற்சிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக்.31

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சிக் கிளையினரால் சாரணர் அணித் தலைவர்களுக்கு நாளை மறுதினம் நடத்தப்படவிருந்த பயிற்சிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போ டப்பட்டுள்ளன.

பயிற்சிகள் நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படுமென மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரம ணியம் அறிவித்துள்ளார். (202-207)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் தின விழா

நவாலி, ஒக்.31

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் அந்தப் பிரதேச முதியோர் சங்கங்களும் இணைந்து நடத்தும் முதி யோர் தின விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரத லிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிராந்திய ஆணையாளர் திருமதி வி.சிவலிங்கம் பிரதம விருந்தி னராகவும், சமூக நலத்துறை மாவட்ட உத்தியோகத்தர் ஒ.ஞானவேல், சண்டிலிப் பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந் தன், சமூகநல மாவட்ட இணைப்பாளர் ஓ.பிரதீபன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இந்த விழாவில் முதியோர்களின் விளை யாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள், முதி யோரைக் கௌரவித்தல், பரிசில்கள் வழங் கல் என்பன இடம்பெறவுள்ளன. (204-100)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் விசேட தேவையுள்ள பிள்ளை களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை , நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் 8,9,10 ஆகிய திகதிகளில் செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## கணித பாட மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைக ளின் தரம் 9 மாணவர்களுக்கான கணித பாட முன்னோடி மாதிரிப் பரீட்சை - இல.1 எதிர்வரும் திங்கட்கிழமை நடை பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் அறிவித்துள்ளார். (202-207)

## மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை மாணவர்களுக்குப் பரிசில்

யாழ்ப்பாணம், ஒக்.31

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை யில் சிசு உதான கணக்கை ஆரம்பித்துள்ள மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களால் வைப்புச் செய்யப்பட்ட தொகைக்கேற்ப பரிசுப் பொருள்கள் அந் தந்தப் பாடசாலைகளில் வைத்து இந்த வாரம் வழங்கப்படவுள்ளன.

2007,2008 ஆகிய காலப் பகுதிகளில் சிசு உதான கணக்கை ஆரம்பித்த மாணவர் களுக்கு வழங்கவெனப் பரிசுப் பொருள்கள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள் ளன.

குடிதண்ணீர்ப் போத்தல், புத்தகப் பை, கடிகாரம், குடை போன்ற பொருள்களே வங்கிக் கிளைக்கு கொண்டு வரப்பட்டுள் ளன. (202-207)

## குழந்தைகளை தத்தெடுப்பதற்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.31

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பொறுப்பில் உள்ள ஐந்து குழந்தைகளை தத்து எடுப்பதற்கு விண்ணப்பித்தவர் களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நீதி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பத்துடன் அனுப்பிய ஆவ ணங்களின் மூலப்பிரதிகளையும், அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதி களையும் கொண்டுகணவன், மனைவி இருவ ரையும்சமூகம் கொடுக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (202-207)

## 'சொண்ட்' நிறுவனத்தின் மரநடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.31

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக் களின் வலையமைப்பு(சொண்ட்) நிறுவ னம் அனர்த்த முகாமைத்துவச் செயற்றிட் டத்தின் கீழ் குடாநாட்டில் மரம் நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவு களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தலா நூறு பயனாளிகளுக்கு மா, தேசி, கொய்யா, உயர்தரப் பப்பாசி, மாதுளை ஆகிய பயன் தரும் மரங்களை இத்திட்டத்தின் கீழ் வழங்கி வருகின்றது.

அத்துடன் பொது இடங்களில் நாட்டக் கூடிய சமண்டலை, மலை வேம்பு போன்ற நிழல் மரங்களையும் கரவெட்டி, கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், சாவகச்சேரி, யாழ்ப் பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளி லிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கு வழங்கி வருகின்றது. (50-204)

## ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி நடத்தும் கவின்கலை வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.31

ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத் தும் கவின் கலை வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் சி.சூரிய குமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த வகுப்புக்கள் அறநெறிப் பாட சாலை மாணவர்களின் இசைத்துறை வளர்ச்சிக்காகவும், ஆளுமை விருத்திக் காகவும் நடைபெறவுள்ளன. (50-204)




வலி.கிழக்குப் பிரதேச செயலகம் நடத்திய சிறுவர், முதியோர் தின விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ், சமூக சேவைகள் உத்தியோகத்தர் [illegible] ஆகியோர் [illegible] வதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.
சாந்திகம் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை முதியோர் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை நான்காவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பழ நோயைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விளைச்சல் பாதிப்பைத் தவிர்ப்போம்!

யாழ். மாவட்டத்தில் நெற்பயிரில் நெற்பழ நோயின் தாக்கம் அதிகரித்து வந்துள்ளது. நெற்பழங்கள் தமது வயல்களில் அவதானிக்கப்பட்டால் தமக்கு கூடிய விளைச்சல் கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆரம்ப காலங்களில் மரபு இனங்களான மொட்டைக் கறுப்பன், சின்னக் கறுப்பன் போன்றவற்றின் கதிர்களில் ஓரிரு மணிகளில் இதன் தாக்கம் காணப்பட்டது. ஆயினும் காலப் போக்கில் யாழ். மாவட்டத்தில் புதிய திருந்திய இனங்களை அறிமுகம் செய்து பயிரிடத் தொடங்கிய பின்னர் அவற்றிலும் சில இனங்களில் குறிப்பாக ஏரி - 402 வர்க்கத்தில் கூடிய தாக்கம் ஏற்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

கடந்த கால போகத்தில் சரசாலை வடக்கு, மட்டுவில், சங்குவேலி, நெணியான் வெளி, அளவெட்டி, தொல்புரம், இருபாலை கிழக்கு ஆகிய பிரதேசங்களில் நெற் பழ நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டது. இந்நோயினை கட்டுப்படுத்துவதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாவிடின் தரமற்ற நெல் மணிகளையும் குறைந்த விளைச்சலையுமே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

**நோய் பற்றிய அறிமுகம்**

இந்த நோய் ''யூஸ்ரிலாகிலோகிடே வைரன்ஸ்'' (Ustilaginoidea Virens) என்னும் பூஞ்சணத்தால் நெற்பயிர் பூக்கும் பருவத்தில் ஏற்படுத்தப்படுகின்றது. இப் பூஞ்சண வித்திகள் காற்று மூலம் ஒரு பயிரிலிருந்து மற்றைய பயிர்களுக்கு பரவக் கூடியவை.இப் பூஞ்சணத்தின் மாற்று விருந்து வழங்கிகளாக தானியக் குடும்பத் தாவரங்கள் காணப்படுகின்றன. இந்நோய் பயிரில் ஏற்படுத்தும் பாதிப்பு காரணமாக மணிகளின் நிறை குறைவடைவதுடன் விதைகளின் முளை திறன் 35% இனால் குறைவடைகின்றது.

**பூஞ்சணங்கள் தொற்றுவதற்கு சாதகமான நிலைமைகள்**

கூடிய சாரீரப்பதன், கூடிய மழை வீழ்ச்சி, 25-30$^{0}$C வரையான வெப்பநிலை வீச்சு, மப்பு மந்தாரமான நாள்கள், பூக்கும் காலத்தில் மிதமிஞ்சிய நைதரசன் பசளைப் பாவனை, மிதமிஞ்சிய வளமுள்ள மண் என்பன இந்நோய் தொற்றுவதற்கு சாதகமான நிலைமைகளாகும்.

**தாக்கம்**

இந்த நோயானது இரு வகையான தொற்றுதல் பொறிமுறைகளைக் கொண்டது.

* பூக்கும் பருவத்தில் தாக்கம் ஏற்படும் போது சூலகம் அழிக்கப்படுவதுடன் பூஞ்சண வித்திகள் விருத்தியடைந்து உட்புதைக்கப்படுவதால் தம்பம், குறி என்பன தடிப்படைந்து காணப்படும்.

* நெல் மணிகள் முற்றிய பின் தொற்று ஏற்படின் வித்துகள் உள் உமியில் சேர்வடைந்து நீரை அகத்துறிஞ்சி பருத்து உமியை உடைத்து பூஞ்சணம் வித்தக விழையத்தில் வளர்ச்சி யடைந்து காணப்படும்.

**நோய் அறிகுறிகள்**

* ஒவ்வொரு நெல்மணியும் மஞ்சள் நிறப் பழம்போல் காணப்படும்.

* பட்டுப் போன்ற வித்திகளின் வளர்ச்சி பூவின் பாகங்களில் இணைந்து காணப்படும்.

* விருத்தியடையாத வித்திகள் தட்டையான மெல்லிய அழுத்தமான மஞ்சள் நிறமானவை. இவை மென்சவ்வினால் மூடிக் காணப்படும்.

* வித்திகள் விருத்தியடைந்து மென் சவ்வை உடைத்து வெளியேறும்.

* முதிர்ந்த வித்தி செம்மஞ்சள் நிறத்தில் இருந்து, மஞ்சட் பச்சை நிறமாக மாறி, பின் கடும் பச்சை நிறமாக மாறும்.

* நெற்கதிரின் சில மணிகள் மட்டும் தாக்கப்பட்டுக் காணப்படும். ஏனையவை சாதாரணமாக இருக்கும்.

**முகாமைத்துவ முறைகள்**

**1.பயிராக்கவியல் முறைகள்:**

* தானியக் குடும்பத்தைச் சேர்ந்த புல் வகைக்களைகள் இப்பூஞ்சண வித்திகளுக்கு மாற்று விருந்து வழங்கிகளாக இருப்பதால் வயல் வரம்புகளிலும் பயிர்களிடையேயும் களைகள் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்துவோம்.

* ஏக்கர் ஒன்றிற்கு நெற்பயிருக்கு சிபார்சு செய்யப்பட்ட 90 கி.கி.யூரியாவிற்கு மேலதிகமாக யூரியா பசளையினை இடும் போது கூடிய அளவு நைதரசன் கிடைப்பதனால் பயிர்களில் கலன்கள் மென்மைய டைந்து காணப்படும். இதனால் இலகு வில் இப் பூஞ்சணம் தொற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, சிபார்சுக்கு மேலதிகமாக யூரியா பாவிப்பதைத் தவிர்க்கவும்.

**2.இரசாயன முறைகள்:**

* குடலைப் பருவத்தில் இருந்து கதிர் வருவதற்கு முன்னான காலப்பகுதியில் காபெண்டசிம் (50% நனையக் கூடிய தூள்) 07 கிராம் 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும். 16 லீற்றர் தாங்கி ஒன்றுக்கு 10 கிராம் போதுமானது பூக்க ஆரம்பித்த பின் பூத்தலின் போது நாசினி விசிறுதல் கூடாது.

முன்னைய போகத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட கண்டங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்து குடலைப் பருவத்தில் 'காபெண்டசிம்' பூஞ்சண நாசினியை மேற் கூறிய அளவில் விசிறுதல் வேண்டும். *

க.தனபாலசிங்கம்,
பாடவிதான உத்தியோகத்தர்,
பயிர்ப்பாதுகாப்பு.

# இந்திய 'ராடர்' கருவிகள் குறித்தும் இயக்குவோர் மீதும் சந்தேகம்

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஒக்.31

மன்னாரிலும் கொழும்பிலும் விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியதன் பின்னணியில் இந்திய 'ராடர்' கருவிகள் மீதும் அதனை இயக்கும் இந்திய படையினர் மீதும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. புலிகளின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டது என அரசு முயன்றால் வெளியிட்ட செய்தி, உண்மைக்குப் புறம்பானது என்பது இத்தாக்குதல் மூலம் நிரூபணமாகியுள்ளது.

-இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும் எம்.பி.யுமான விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

புலிகளின் விமானங்கள் மன்னாரிலும் கொழும்பிலும் தாக்குதல்களை நடத்தி திரும்பிச் சென்றுள்ளன. ஏழாவது தடவையாக இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டோம். அவர்களது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டது என அரசு அறிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அத்தோடு இந்தியாவின் ராடர் கருவிகள் பொருத்தப்பட்டு அந்நாட்டின் விமானப்படை அதிகாரிகளே அவற்றை இயக்குகின்றனர். இந்த ராடர்களில் புலிகளின் விமானம் தெரியவில்லையா?

அல்லது இந்திய விமானப்படை அதிகாரிகள் புலிகளின் விமானத்தை கண்டும் காணாதவர்கள் போல் செயற்பட்டனரா? இக்கருவிகள் செயலிழந்து விட்டனவா? என்பன போன்ற நியாயமான சந்தேகங்கள் எழுகின்றன. எனவே, இச்சம்பவம் தொடர்பாக உண்மையை அரசு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார். (சி)

# சுன்னாகத்தில் ஞாயிறன்று கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.31

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் நடத் தும் கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள ஐயனார் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தினரும், சுன்னாகம் இளைஞர் கழகத்தினரும் இணைந்து அனுசரணை வழங்குகின்றனர். (50-204)

# என்ன தீர்வு வைத்திருக்கிறார் மஹிந்த? உடனே வெளிப்படுத்த அரசு தயாரா?

## ஐ.தே.கட்சி விடுவதாக இல்லை

கொழும்பு, ஒக். 31

''இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கப் போகும் அரசியல் தீர்வுத் திட்டம்தான் என்ன? 13 ஆவது திருத்தச் சட்டமா? அல்லது அதற்கு அப்பாற்பட்டதா? அல்லது இரண்டுமே இல்லாத புதிய தீர்வா? எதுவாகவிருந்தாலும் அதை உடனடியாக வெளிப்படுத்த அரசு முன்வருமா?

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் எம்.பி. தயாசிறி ஜயசேகர, நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கேள்வி எழுப்பினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவில் ஏற்பட்ட போராட்டத்தைத் தடுப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி சென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டால் இலங்கைக்கு வெற்றிகிட்டியுள்ளது என்று பஸில் கூறினார்.

அதேபோல் தமிழ் நாட்டில் போராட்டத்தை ஏற்படுத்திய தமிழக முதல்வர் கருணா நிதி தமக்கும் வெற்றி கிடைத்துள்ளதாகக் கூறினார்.

உண்மையில் யாருக்கு வெற்றி என்று தெரியாது. இந்தியாவுடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றியும் எமக்கு விரிவாகத் தெரியவில்லை.

இருப்பினும், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்க இலங்கை அரசு தயாராகவிருப்பதாக பஸில் இந்திய அரசிடம் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அங்கு சுற்றி இங்கு சுற்றி இறுதியாக எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் எமது கட்சியினதும் நிலைப்பாட்டுக்கு வந்துள்ளார்.

அரசியல் தீர்வின் மூலம்தான் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று எமது தலைவர் 5 வருடங்களுக்கு முன் கூறியதை மஹிந்த ராஜபக்ஷ இப்போது ஏற்றுக்கொண்டுள்ளார்.

இருப்பினும், மஹிந்த முன்வைக்கப் போகும் அரசியல் தீர்வு என்ன? 13 ஆவது திருத்தச் சட்டமா அல்லது இரண்டும் அல்லாத புதிய தீர்வா?

முன்வைக்கப் போகும் தீர்வு எதுவாயினும் அதைமஹிந்த ராஜபக்ஷ உடன் அறிவிக்க வேண்டும் - என்றார். (சி)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் அவசர திருத்த வேலைகளைச் செய்வதற்காக 01.11.2008, 08.11.2008 சனிக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*
**29.10.2008**

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
**இலங்கை மின்சார சபை.**

(சி/555142)

# சேவை நலன் பாராட்டு விழா

## உயர்திரு.பொ.அலிஸ்ரன் அருமைநாயகம்

(இலங்கை வங்கி, உதவிப் பொது முகாமையாளர், வடபிராந்தியம்)



எமது மண்ணின் வங்கிக் கிளைகள் அனைத்திலும்
என்றுமில்லா சாதனை புரிந்த ஏந்தலே
இன்று ஓய்வு பெறும் தங்களை பிறந்த நாளிதனில்
கிறிஸ்துவின் அன்பில் நீண்ட காலம்
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம் வாழிய! வாழியவே!

ஊழியர்கள்
இலங்கை வங்கி, வட பிராந்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் தவறான அணுகுமுறையால் பாதிக்கப்படுபவர்கள் ஈழத் தமிழர்களே!

**இலங்கையில் ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பட்ட துன்ப - துயரங்கள் குறித்துத் தமிழக நாளேடான 'தினமணி'யில் கட்டுரை ஒன்று வரையப்பட்டிருந்தது.**

**உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் எழுதிய இந்தக் கட்டுரையின் முழுவடிவம் இங்கு தரப்படுகிறது.**

கடந்த 30 ஆண்டு காலத்திற்கு மேலாக அண்டை நாடான இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் இனவெறிப் படுகொலைகள் குறித்த பிரச்சினையில் தமிழகத்தில் இதுவரை இல்லாத வகையில் வரவேற்கத்தக்க பெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இம்மாதம் 14ஆம் திகதியன்று தமிழக முதல்வர் கருணாநிதி தலைமை யில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள தமிழர்கள் நடுவில் பெரும் உற்சாகத்தை


முதல்வர் மு.கருணாநிதி

ஊட்டியுள்ளன.

### அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முடிவுகள்

அக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்துத் தலைவர்களுமே இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படுவது குறித்து பெரும் கவலை தெரிவித்தனர். போரை உடனடியாக நிறுத்தி, பாதிக்கப்பட்ட பல லட்சம் தமிழ் மக்களுக்கு உணவு, மருந்து போன்றவற்றை உடனடியாக அனுப்பி வைக்கவும், இனப்பிரச்சினைக்கு அமைதியான பேச்சுகளின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இராணுவ ரீதியான தீர்வு ஒருபோதும் கூடாது என்றும், இலங்கைக்கு இந்திய அரசு இராணுவ ரீதியான உதவி எதையும் செய்யக்கூடாது என்றும் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் தெரிவித்தனர். அனைத்துக் கட்சித் தலைவர்களும் வெளிப்படுத்திய இந்த உணர்வுகளின் அடிப்படையில் அக்கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

போரை நிறுத்தி உடனடியாக அமைதியை ஏற்படுத்த இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும். 15 நாள்களுக்குள் இவ்வாறு செய்யாவிட்டால் தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது.

30 ஆண்டு காலமாக தமிழ்நாட்டில் பல்வேறு கட்சிகள் இணைந்தும் தனித் தனியாகவும் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள், மாநாடுகள் ஆகியவற்றை நடத்தி வந்துள்ளன. தமிழக முதலமைச்சர்களினால் அவ்வப்போது அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் கூட்டப்பெற்றும், அனைத்துக் கட்சித் தூதுக்குழுவாக புதுடில்லி சென்று பிரதமரிடம் முறையீடுகள் அளிக்கப்பட்டும் வந்துள்ளன. தமிழக சட்டமன்றத்திலும் இந்திய நாடாளுமன்றத்திலும் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுள்ளன.

### இலங்கை அரசு மதிக்கவில்லை

இந்திய அரசின் சார்பில் அமைச்சர்கள் நிலையிலும் அதிகாரிகள் நிலையிலும் பலர் இலங்கைக்கு அனுப்பப்பட்டு இந்தியாவின் ஆழ்ந்த கவலைகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பிரதமர் இந்திராவின் காலத்தில் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுகள் நடத்தப்பட்டு, இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு - கையெழுத்திடப்பட்ட உடன்பாட்டினையும், அதைப் போல பிரதமர் ராஜீவ்காந்தி காலத்தில் கையெழுத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டினையும் மதித்துச் செயல்படுத்த இலங்கை அரசு முன்வரவில்லை. இந்தப் பின்னணியில் இப்போது தமிழக முதல்வர் தலைமையில் அனைத்துக் கட்சிகளும் கூடி எடுத்துள்ள முடிவுகள் முற்றிலும் வேறுபட்டவையாகும். கடந்த காலத்தில் இத்தகைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆறரைக் கோடித் தமிழ் மக்களின் சார்பில் இந்திய அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே இந்த முடிவுகள் கருதப்பட வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு என்ன செய்ய வேண்டும் - என்பதை வரையறுத்துக் காட்டிய தீர்மானமும் - அதைச் செய்யத் தவறினால் தமிழகம் எத்தகைய நிலையை மேற்கொள்ளும் என்பதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். 30 ஆண்டு கால வரலாற்றில் இத்தகைய திட்டவட்டமான நிலைமையை தமிழகம் எடுக்கவில்லை என்பதை உணர்ந்து இந்திய அரசு உடனடியாகச் செயல்பட வேண்டும். தமிழ் மக்கள் அனைவரினதும் விருப்பமும் இதுதான்.

ஆனால் சொந்த சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும் மனம் இரங்காத சிலர் அனைத்துக் கட்சிகள் மேற்கொண்ட முடிவுகளைத் திரித்துப் பொய்ப் பிரசாரம் செய்வதில் முனைந்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று அவர்கள் வாயும் மனமும் கூசாமல் பேச முன்வந்துள்ளனர்.

### தமிழர்களைப் பற்றி அக்கறையில்லை

இலங்கையில் தொடர்ந்து விமானத் தாக்குதலாலும் பீரங்கிக் குண்டு வீச்சினாலும் செத்து மடியும் தமிழர்களைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. உண்ண உணவின்றியும் இருக்க இடமின்றியும் நோய்களுக்கு மருந்தின்றியும் 3 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் காடுகளிலும் வெட்ட வெளியிலும் துடிப்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள வல்லரக்கர்களின் கொடுஞ்செயலைக் கண்டிக்கவும் அவர்கள் முன்வரவில்லை. சிங்கள அரசுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதையே தங்களின் பிறவிப் பயனாகக் கருதுகிறார் கள்.

ராஜீவ்காந்தி காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து வந்துள்ள இந்திய அரசுகள் இலங்கை இனப்பிரச்சினையில் கையாண்டுவரும் தவறான கொள்கையின் விளைவாக வேண்டாத விளைவுகள் உருவாகி இருப்பதை மேற்கண்டவர்கள் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

### ஏற்பட்ட விளைவுகள்

இந்திய அரசின் தவறான அணுகுமுறைகளின் காரணமாக கீழ்க்கண்ட விளைவுகள் ஏற்பட்டுவிட்டன.

1. ஈழத் தமிழர்கள் நலன்களுக்கு எதிராகவும் சிங்கள அரசின் நலன்களைக் காக்கும் வகையிலும் இந்திய அரசின் நடவடிக்கைகள் அமைந்தன.

ஈழத் தமிழர் பிரச்சினையில் சிங்கள அரசு வகுத்த தீர்வை இந்தியா ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக சிங்கள அரசு தனது இன அழிப்புப் போரைத் தங்குதடையின்றி தொடர்வதற்கு அனுமதித்தது.

2. சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ்த் தாயகத்தை பெறுவதற்காக ஈழத் தமிழர்கள் நடத்திய போராட்டம் அங்கீகாரமற்றதாகவும் அரசியல் சார்பற்றதாகவும் ஆக்கப்பட்டது. தமிழ்ப் போராளிகளைப் பயங்கரவாதிகள் என வர்ணித்து ஒழித்துக் கட்டுவதற்கு சிங்கள அரசு முற்பட்டதை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இந்திய அரசின் நடவடிக்கைகள் அமைந்தன.

3. ஈழத் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு காண சிங்கள அரசு தொடர்ந்து செய்த முயற்சிகளைத் தடுக்க இந்திய அரசின் அணுகுமுறைகளினால் முடியவில்லை.

4. இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு உட்பட்ட நாடான இலங்கையில் நேரு, இந்திரா காலங்களில் அடியெடுத்து வைக்க முடியாத நிலையில் இருந்த அன்னிய நாடுகள் இலங்கையில் கால் ஊன்றுவதற்கு ராஜீவின் கொள்கை இடம் அளித்து விட்டது.

இக்கொள்கையால் ஏற்பட்ட தடுமாற்றங்களின் விளைவாக தென்னாசியப் பகுதியில் அமெரிக்காவின் நோக்கத்திற்கு இந்திய அரசு மறைமுகமாகத் துணை புரிந்து விட்டது. இப்பகுதியில் இந்தியாவைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாகும். இந்தியா அதனுடைய எல்லைகளுக்குள்ளாகவே அடங்கிக் கிடக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. இதற்காக இந்தியாவுக்குள்ளும் தென்னாசியாப் பகுதிக்குள்ளும் பலமான நிர்பந்தங்களை அமெரிக்கா உருவாக்குகிறது. இலங்கை அரசுக்குத் தான் நேரடியாக உதவி செய்வதை விட தனது நட்பு நாடான பாகிஸ்தான் மூலம் உதவி செய்து வருகிறது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அள்ளிக் கொடுத்த ஆயுதங்களின் ஒரு பகுதி இலங்கைக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

### அமெரிக்கா வைத்துள்ள கண்

இலங்கையிலுள்ள திருகோணமலைத் துறைமுகத்தின் மீது அமெரிக்கா ஒரு கண் வைத்துள்ளது. மேலும் அராபிய நாடுகளிலிருந்து கிழக்கு நாடுகளுக்கு மசகு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இலங்கை வழியாகவே செல்கின்றன. கிழக்கு நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களும் இலங்கையைத் தொட்டுச் செல்கின்றன. இந்துமாக் கடலில் கப்பல் போக்குவரத்துப் பாதையில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்திருக்கிறது. எனவே, இந்தக் கடல் பாதைகள் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமானால் இலங்கை தனது ஆதிக் கத்திற்கு உள்பட்ட நாடாக இருக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது.

சீனாவும் பாகிஸ்தானும் இலங்கைக்குத் தாராளமாக இராணுவ உதவிகள் அளிப்பதை ஆழமான உள்நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்த நாடுகளின் பொருள்களை விற்பதற்கு இலங்கை ஒரு பெரிய சந்தை அல்ல. இலங்கையினால் இந்த நாடுகளுக்கு எந்தவிதமான இலாபமும் கிடையாது. ஆனாலும், சின்னஞ்சிறிய நாடான இலங்கைக்கு இந்நாடுகள் உதவி செய்வதற்குக் காரணம், இந்தியாவுக்கு எதிரான ஒரு தளமாக இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான்.

இந்திய அரசின் தவறான கொள்கையின் விளைவாக ஈழத் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானதை விட இந்தியா மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறது. இந்தியாவின் தென்வாயிலில் பேரபாயம் நம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. இதுகுறித்து ஏற்கெனவே பலர் எச்சரித்துள்ளனர்.

நேருவின் நண்பரும் சீனாவில் இந்தியத் தூதுவராக இருந்தவருமான சர்தார் கே.எம். பணிக்கர் இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்திருந்தார். 'இந்தியாவும் இந்துமாக் கடலும்' என்ற தலைப்பில் பல ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதியுள்ள நூலின் 7ஆவது பக்கத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

''இந்தியாவைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய விவாதத்தில் கடல் பகுதியை அலட்சியமாக ஒதுக்கி விடுகிற போக்கு இருப்பது துரதிருஷ்டவசமானது. இந்தியாவின் பாதுகாப்பு என்பது வடமேற்கு எல்லைப் பகுதிகளை மட்டும் பொறுத்தது என்ற முடிவுடன் விவாதங்கள் நடத்தப்படுகின்றன. 16-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்தியாவின் எதிர்காலத்தை நில எல்லைகள் முடிவு செய்யவில்லை. மாறாகக் கடல்தான் எதிர்காலத்தை முடிவு செய்தது என்பதை மறந்துவிடக் கூடாது.''

வரலாற்று அறிஞரான டி.ஆர். இராமச்சந்திரராவ் 'இந்தியாவும் இலங்கையும் ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் எழுதியுள்ள நூலின் 8ஆவது பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

''இந்துமாக் கடலில் இயற்கையாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இலங்கை உள்ளது. இந்துமாக் கடலின் பாதுகாப்பு அதைப் பொறுத்ததேயாகும். நிலவியல் அடிப்படையிலும் அது நடுமையமான இடத்தில் அமைந்துள்ளது. இந்துமாக்கடல் வழியாகச் செல்லும் விமானத் தடங்களுக்கும் கப்பல் தடங்களுக்கும் இலங்கை நடு நாயகமாக உள்ளது.''

### தயக்கம் காட்டாத இலங்கை

இந்தியாவின் எதிரி நாடுகளான பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் நெருங்கி உறவாட இலங்கை ஒரு


பிரதமர் மன்மோகன்சிங்

போதும் தயங்கியதில்லை. இந்தியாவின் பாதுகாப்பைப் பற்றி இலங்கை ஒரு போதும் கவலைப்பட்டதில்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் மற்றைய நாடுகளுடன் உடன்பாடுகள் செய்து கொள்வதற்கும் இலங்கை தயங்கியதில்லை. 1962ஆம் ஆண்டு இந்தியாவின் எல்லைகளை சீனா ஆக்கிரமித்த போது இந்திய - சீனப் படைகளின் மோதல்கள் நிகழ்ந்து இரு நாடுகளின் உறவும் மிகவும் சீர்கெட்டிருந்தது. அந்த நிலையில் 1963ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையும் சீனாவும் கடல் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டன. சீனப் போர்க்கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்து போவதற்கான உடன்பாடும் இந்த உடன்படிக்கையில் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் இந்தப் போக்குகளைக் கண்ட இந்திய இராணுவத் தளபதிகளும் இந்திய அரசுக்குத் தங்கள் கவலைகளைத் தெரியப்படுத்தினார்கள். இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதியான ரவி கௌல் என்பவர் எழுதியுள்ள நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''பிரிட்டனுக்கு அயர்லாந்து எவ்வளவு முக்கியமோ, சீனாவுக்கு தாய்வான் எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோன்று இந்தியாவுக்கு இலங்கை முக்கியமானதாகும். இந்தியாவுடன் நட்பு நாடாக அல்லது நடுநிலை நாடாக இலங்கை இருக்கும்வரை இந்தியா கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இந்தியாவுக்கு எதிரான நாடுகளின் வசத்தில் இலங்கை சிக்குமானால் அந்த நிலைமையை இந் தியா ஒருபோதும் சகித்துக் கொள்ள முடி யாது. ஏனென்றால் இந்தியாவுக்கு அதனால் ஆபத்து வந்துசேரும்''.

### கவலைப்படாத சிங்களத் துதிபாடிகள்

இந்தியாவுக்கு வரவிருக்கும் அபாயத்தைப் பற்றி தமிழ்நாட்டில் உள்ள சிங்களத் துதிபாடிகளுக்கு கொஞ்சமும் கவலையில்லை. அவர்களுக்கு ஈழத்தமிழர்களின் நலனிலும் அக்கறை இல்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு வந்துள்ள அபாயம் குறித்தும் கவலையில்லை. சிங்கள இனவெறியருக்கு இந்தியா தொடர்ந்து எல்லாவகை உதவிகளையும் செய்து ஈழத் தமிழர்களை அழிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே நோக்கமாகும். அதற்காக அவர்கள் எது வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

இந்தச் சிங்களத் துதிபாடிகள் இலங்


பழ. நெடுமாறன்

கையின் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதைக் கிளிப்பிள்ளை போலத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். மேலும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிட முடியாது என்றும் அடிக்கடி சொல்கிறார்கள்.

சிலவேளைகளில் இந்தியப் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் இதே கருத்தை வலியுறுத்துகிறார்கள். இத்தகையோருக்கு இந்தியாவின் கடந்தகால வரலாறு கொஞ்சமும் தெரியவில்லை. ஜவாஹர்லால் நேரு காலத்திலிருந்து இந்திரா காந்தி காலம் வரை எத்தகைய வெளிநாட்டுக் கொள்கையை இந்தியா கையாண்டு வந்திருக்கிறது என்பதை நம்முடைய

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனைகளை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது

## -வன்னி வலய மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம்

வன்னிக் கல்வி வலயங்களில் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக கல்வி நடவடிக்கைகள் தளம்பல் நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலைமைகளை சீர் செய்வதற்காக, 16 ஆம் திகதி புதன்கிழமை வன்னியின் அனைத்துக் கல்வி வலய பணிப்பாளர்களும் யுனிசெவ் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்புத் தொடர்பாக அறிந்துகொள்ள வன்னி வலய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பசுபதி அரியரட்ணம் அவர்களை நேர் கண்டோம்.

***கேள்வி:*** பாடசாலை உபகரணங்களை வன்னிக்கு அனுப்புவது தொடர்பாக வவுனியா அர சாங்க அதிபரிடம் ஏதாவது வேண்டுகோள் விடுத்துள்ளீர்களா?

***பதில்:*** 2008 ஆம் ஆண்டுக்கு வன்னி வலயத்திற்குக் கொண்டு செல்வதற்காக 6 வாகனங்களில் இலவசப் பாடநூல் பொதிகளும், 2 வாகனங்களில் இலவசச் சீருடைப் பொதிகளும் தேங்கி இருக்கின்றது. அதேபோல 2009 ஆம் ஆண்டிற்குக் கொண்டு செல்வதற்காகவும் பொதிகளில் இலவசப்பாட நூல்கள் வந்திருக்கின்றன. இது சம்பந்தமாக அத்தியாவசிய ஆணையாளரோடு தொடர்பு கொண்டு வன்னிப் பகுதிக்கான இலவச பாடநூல்களையும், சீருடைகளையும் பெறுவதற்கு முயற்சியை மேற்கொண்டு வருவ தாகக் கூறியிருந்தார்.

***கேள்வி:*** வன்னிக் கல்வி வலயத்தில் பாடசாலை நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படுகின்றன?



***பதில்:*** கடந்தவார இறுதிவரை கிளிநொச்சி வலயத்திலிருந்து ஏறத்தாழ 29, 000 மாணவர்களும், முல்லைத்தீவு வலயத்திலிருந்து 2504 மாணவர்களும், துணுக்காய் வலயத்திலிருந்து 6997 மாணவர்களும், மடு வலயத்திலிருந்து 7840 மாண வர்களும், வவுனியா வடக்கு வலயத்திலி ருந்து 5122 மாணவர்களும் இடம் பெயர்ந்து வதிகின்றார்கள். அவர்கள் தங்கி யிருந்து படிப்பதற்கு உடனடியாக தற் காலிகக் கொட்டில்கள் தேவை. அவற்றை அமைப்பதற்கு இங்கிருந்து எவ்வித உப கரணங்களையும் கொண்டு செல்ல முடியாத நிலையில் நிறுவனங்களிடமி ருந்து நிதியுதவியை எதிர்பார்த்தோம். இவ்வா றான நிதியுதவியை அவர்கள் வழங்கி னால் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற காட்டு மரங்களின் தடிகளையும் ஓலை களையும் பாவித்து கொட்டில்களை அமைப்பதற்கான உதவிகளை நாங்கள் கோரி யிருந்தோம்.

***கேள்வி:*** ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான குடிதண்ணீர் சேமிப்பு வசதிகள் வன்னியில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

***பதில்:*** இடம்பெயர்ந்த மாணவர்கள் ஏனைய பாடசாலைகளுடன் சேர்ந்து படிக்கின்ற ஒழுங்குமுறை [illegible]ள்ளது. அதேபோல் பாடசாலை தவிர்ந்த [illegible]ங்களில் தற்காலிக கொட்டில்களை அமைத்து பாடசாலைகள் நடைபெறுகின்ற இடங்களும் உள்ளன. அவ்வாறான இடங்களில் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது குடிதண்ணீர் தான். ஆகவே குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான கொள்கலன்களை அவர்களிடம் கேட்டிருக்கின்றோம். அவற்றையும் அவர்கள் விரைவில் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

***கேள்வி:*** மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய மனநிலையில் இருக் கின்றார்களா?

***பதில்:*** இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்கனவே உளவியல் துறையில் பயிற்சிபெற்ற ஆள்கள் இருக்கின் றார்கள். ஆனால் அவர்கள் பல்வேறு பகுதிகளிலும் சென்று இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு நிதியுதவி தேவையாக இருக்கின்றது. அந்த நிதியுதவியை நாங்கள் அவர்களிடம் கேட்டிருக்கின்றோம்.

***கேள்வி:*** இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கழிவறை வசதிகளை பாடசாலைகளில் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றதா?

***பதில்:*** மலசலகூடங்களும் அவசியமாகத் தேவையாகவுள்ளது. சிமெந்து, கல் போன்றவற் றைப் பெறமுடியாத காரணத்தினால் தற்காலிகமாக ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று மலசல கூடங்களை அமைப்பதற்கான தேவைப் பட்டியல்களை நாங்கள் அவர்களிடம் கொடுத்திருக்கின்றோம்.

**நன்றி: மீண்டும் வாழ்வோம் (INTER NEWS)**

# நாட்டினதும் பிரதேசத்தினதும் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த முதியவர்களின் வாழ்வு ஒரு பாடம்

## இப்படிக் கூறுகிறார் மேலதிக அரச அதிபர்

நல்லூர், ஒக்.31

நாட்டினதும் பிரதேசத்தினதும் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த இன்றைய முதியவர்களின் வாழ்வு இளைஞர்களுக்கு ஒரு பாடமாக அமைகின்றது.

இவ்வாறு கூறினார் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி.

நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய முதியோர் தின விழா நேற்று முன்தினம் புதன்கிழமை சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் மேலும் உரையாற்றுகையில்:

மூத்தவர்கள் ஒரு காலத்தில் தங்களைப் போன்று இளைஞர்களாக இருந்தவர்களே என்பதை இன்றைய இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

அறிவும், ஆற்றலும், அனுபவமும் நிரம்பப் பெற்ற வழிகாட்டிகள் என்ற வகையில் முதியவர்களுக்கு உரிய கௌரவத்தையும் அந்தஸ்தையும் இளம் சமுதாயம் வழங்க வேண்டும். அவர்களது வேலைத் திறன் அனுபவங்களை நான் நேரடியாக அறிந்து, அதற்கமைவான சில வேலைத் திட்டங் களைச் செயற்படுத்திய சந்தர்ப்பத்தை நினைவு கூறுகிறேன்.



ஒரு முதுமையடைந்த வைத்திய அதிகாரி இளைஞர்களைப் போன்று சுறு சுறுப்பாக - அவர்களை விட மிகவும் சுறுசுறுப்பாகத் தனது செயற்பாடுகளை மேற் கொண்டதையும், தான் ஓர் இளைஞன் என்று கூறி மகிழ்ந்ததையும், கிராமப்பகுதி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கண்ட போது எனக்கு வியப்பாக இருந்தது. இந்த வயதிலும் கூட மக்களுக்குச் சேவைபுரிய வேண்டும் என்ற ஆதங்கம் அவரைப் போன்று பலருக்கு உண்டு.

இளைஞர்களாக இருந்து, இளைஞர்களின் மனநிலையை உணர்ந்தவர்கள் என்பதால், நீங்கள் அவர்களை உணர்ந்து உங்களது அனுப வங்களை அவர்க ளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சிறுவர்தினம், முதி யோர்தினம் இரண் டையும் ஒன்றாக நடத்த வேண்டும். அப்போது தான் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளமுடி யும். சிறுவர்களின் எதிர்காலத்தை நல்ல முறையில் வழிப் படுத்துவது போன்று முதியவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாகவும் இருத்தல் வேண்டும்.

சமூக சேவைகள் அமைச்சும் பல திணைக்களங்களும் இதற்காக உதவுகின்றன.

முதியவர்கள் தமக்குப் பாரம் என்று சிலர் நினைக்கிறார்கள். இளந் தலைமுறைக்குப் பாதுகாப்பற்ற சூழல் இருப்பதால் சிலர் அவர்களை விட்டு வெளியேறும் நிலை இருக்கிறது. எந்தச் சூழலிலும் மூத்தவர்களின் அனுபவமும் அறிவுரைகளும் இள்ந்தலைமுறைக்கு உதவியாகவே இருக்கும் - என்றார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் உரையாற்றும் போது: முதியவர்கள் தமது வாழ்நாளில் பெற்ற அறிவும் அனுபவமும் நமக்கு என்றும் உறுதுணையாக விளங்கும். நடமாடும் நூலகமாக உதவும்,அவர்களை ஒதுக்கி வைத்து நாம் பெரியதாக எதையும் சாதிக்க முடியாது. முதியவர்களின் முக்கியத்துவமும் சிறுவர்களின் நாளைய தேவையும் உணரப்படுவதால்தான் இது போன்ற நிகழ்வுகளூடாக இரு சாராரிடமும் புதிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக் கூடியதான வாய்ப்புகள் உருவாகின்றன - என்றார்.

(202-211)

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப பணிமனைகளில் இலவச சித்த மருத்துவ சேவைகள்

கோப்பாய்,ஒக்.31

வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனை உட்பட 4 உப பணிமனைப் பிரிவுகளிலும் இலவச சித்த மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது இரண்டு சித்த மருத்துவர்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் பெருமளவு நோயாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இம் மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் பலவும் உள்ளூர் உற்பத்தி நிலையங்களிலும் கொழும்பு ஆயுள்வேத திணைக்களத்திலிருந்தும் பெறப்பட்டு வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது. (202-207)


**கற்கை நெறிகள்**

(தமிழ், ஆங்கிலம்) தட்டெழுத்து, Ms office, Page maker, Corel drow, Photo shop என்பன தனியான கவனிப்புடன் கற்பிக்கப்படும்.

**STCA**,37, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
T.P NO: 077 6916110, 0775150608
(79500)


**தவறிவிட்டது**

ஊரெழு கிழக்கு, ஊரெழு என்னும் முகவரியுடைய திருநாவுக்கரசு நிரோஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (907991520V) யாழ்ப்பாணத்திற்கும் ஊரெழுவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்திற்கு அல்லது 0778036785 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


**யாழ்.கோப்பாய் மகா வித்தியாலயம்**
*தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2008*
*சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும்*
**பாராட்டு விழா அழைப்பு**

| | |
|---|---|
| தலைவர் | : லயன் சோ.விஜயரூபன் |
| இடம் | : பாடசாலை பிரதான மண்டபம் |
| காலம் | : இன்று (31.10.2008) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணி |
| முதன்மை விருந்தினர் | : வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா MJF, J.P பிரதி மாவட்டச் செயலர் 306 B (2007 - 2008) (துணைத்தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.மாவட்டம்) |
| சிறப்பு விருந்தினர்க்ள் | : திரு.பொ.சிவானந்தராஜா (அதிபர் - யா/கோப்பாய் மகா வித்தியாலயம்) லயன் சு.முத்துக்குமாரசாமி (கிராம அலுவலர் - கோப்பாய்) |

பாராட்டுப் பெறும் மாணவச் செல்வங்கள்



ச.சாயவனான் புள்ளி 141 | கு.பனுசிகா புள்ளி 125 | சு.மிதுர்சன் புள்ளி 122 | ர.சிந்துஜன் புள்ளி 119

பூ.ஜென்சிகா - 112 | த.தமிழ்மதி - 104

(சி/555126)

அன்புடன் அழைக்கின்றோம்: பழைய மாணவர்கள்

விளம்பர அனுசரணை: **K.K.Phone Service** No. 1, Modern Market, Jaffna.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**மருத்துவ பீட உடற்கூற்றியல் துறையின்**
**விண்ணப்பம்**

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட உடற்கூற்றியல் துறையில் செயன்முறை கற்றல்களுக்கு தேவையான மனித உடல்கள் போதியளவு இன்மையால் செயன்முறைக் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே மருத்துவ மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தவும் திறன்மிக்க கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளவும் சமூகப் பற்றாளர்களின் உதவியை மருத்துவபீடம் கோரி நிற்கின்றது.

இந்த வகையில் இறப்பின் பின்னர் தமது புகழுடம்பை தானம் செய்யும் உயர்ந்த நற்பணியில் ஈடுபட விரும்புவோர் மருத்துவ பீடத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் - 021 222 2073


**பதில் பதிவாளர்**
30.10.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகஷ்டப் பிரதேசத்தில் குறைந்த வளத்துடன் இயங்கி சாதனைகள் பல படைக்கும் எருதிடல் அ.த.க. பாடசாலை



பாடசாலையின் முகப்புத் தோற்றம்



அதிபர் வே.பாலசுப்பிரமணியம்

சிறிய கிராமத்தின் சிறிய பாடசாலை. ஆனால் வருடாந்தம் தனது பெயரை யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து நிலை நாட்டி வருகிறது எமது பாடசாலை எனப் பெருமையுடன் நினைவு கூர்ந்தார் எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் வே.பாலசுப்பிரமணியம்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கைதடிக் கிராமத்தின் வடபுலத்தில் நில, நீர், தரவைக் கடல்வளம் சேர் அழகிய தமிழ்க் கிராமம்தான் நவபுரம்.




இங்குள்ள இப்பாடசாலை வலயக் கல்வித் திணைக்களத்தால் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ''தேவைதான் கண்டுபிடிப்புகளின் தாய்,'' எனக் கூறும் ஆங்கிலேயரின் பழமொழி போல இப்பாடசாலையும் தனது சாதனைகளை அடிக்கடி உலகறியச் செய்து வருகிறது.

இப்பாடசாலைக்கு காலைப்பொழுதில் சென்று அதிபருடன் பாடசாலையின் தோற்றம், வரலாறு, இன்றைய நிலை, சாதனைகள் பற்றி உரையாடினோம். அப்போது அவர் கூறியவை இவைதான்:-

இப்பாடசாலை 18.01.1961இல் தோற்றம் பெற்றது. அப்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை ஆண், பெண் இருபாலாரும் கல்வி கற்றனர்.

1967 ஜனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை தரம் பிரிப்புக் கொள்கையினால், 5ஆம் வகுப்பு வரை மட்டும் நடைபெறும் ஆரம்பப் பாடசாலையாக இப்பாடசாலை தரக் குறைப்புச்செய்யப்பட்டது.

இப்பாடசாலையின் தோற்றத்தின்போது துணை ஆசிரியராக முதல் நியமனம் பெற்று வந்த அமரர் பொன் சபாபதி 1966 வரை கடமை புரிந்தார்.

இவரே பின்னாளில் 1995 முதல் 2000 ஆம் ஆண்டு வரை கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளான பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் தீவிர அக்கறை காட்டுகின்றனர்

இவரது ஆசிரியப் பணிக்காலம், இக்கிராம மக்களின் உயர்வுக்கான அடித்தளங்கள் இடப்பட்ட பொற்காலமாக நினைவு கூரப்படுகின்றது.



செல்வி இரவீந்திரன் கம்சனா

அவர், சமூக மேம்பாட்டை மேற்கொள்ளல், கலை பண்பாட்டு விழுமியங்கள் வளர்க்கப்படல், விளையாட்டுத் திறன்கள் விருத்தியாக்கப்படல் என அர்ப்பணிப்புடன் உழைத்துள்ளார். இவரது காலத்தில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற் பயிற்சிப் போட்டிகளில் எருதிடல் அ.த.க. பாடசாலை தொடர்ச்சியாகப் பரிசுகளைப் பெற்றுள்ளது.

சாவகச்சேரி தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.என்.நவரத்தினம் இக்கிராமத்திற்குத் தேவையான பல அடிக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் இம்மக்கள் எருதிடல் என அழைக்கப்பட்ட தமது கிராமத்திற்கு நவபுரம் எனப் பெயரிட்டனர். அதுவே இன்றும் வழக்காகிவிட்டது.

ஆயினும் இப்பாடசாலை அதன் பாரம்பரிய பெயரிலேயே எருதிடல் என அழைக்கப்படுகிறது.

பாடசாலை அதிபரிடம் பாடசாலையின் தற்போதைய நிலை, வளங்களின் தன்மை பற்றிக் கேட்டபோது, ''தற்போது தரம் 5 வகுப்பு வரை 56 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதிபருடன் 3 நிரந்தர ஆசிரியர்களும், ஒரு தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியரும், ஒரு தொண்டர் ஆசிரியரும் உள்ளனர்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சென்ற ஆண்டு செல்வி ச.லதுசனா சித்தியடைந்தார். இவ்வருடமும் செல்வி இரவீந்திரன் கம்சனா 119 புள்ளிகளுடன் சித்தியடைந்ததும், செல்வி வி.உகன்யா அண்மித்த புள்ளிகளைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கவை.

கிராமிய விவசாயிகளான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி குறித்து மிகவும் அக்கறை உள்ளவர்கள். அவர்களின் மனித சக்தி வலு, பாடசாலையின் தேவைகள் சிலவற்றை நிறைவு செய்கிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.சந்திரரோதயம், பெற்றோர்களை ஒருங்கிணைத்து இப்பணியைச் சிறப்பாக ஆற்றி வருகின்றார். தென்மராட்சி வலய மட்டப் போட்டிகளின்போது இப்பாடசாலை மாணவர்கள் பரிசில்களைப் பெற்று வருகின்றனர்.

பாடசாலைக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் சிறந்த முறை யில் மலசலகூடம் கட்டித் தந்துள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (SCF) மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் பலவற்றை வழங்கியுள்ளது.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் அனைத்து மாணவர்களுக்கும் தரமான சப்பாத்து, காலுறை என்பவற்றை விநியோகித்துள்ளது.

சுண்டுக்குழியிலுள்ள ''மனதுருக்கம்'' எனும் தொண்டர் ஸ்தாபனம் ஒரு லட்சத்து 87ஆயிரம் ரூபா பெறுமதியில் மாணவர்களுக்கு பற்றாக்குறையான தளபாடங்களை அண்மையில் வழங்கியது. கனடாவிலுள்ள கைதடி மக்களால் தொலைக்காட்சியொன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டு உள்ளது''- என்றார் அதிபர்.

பாடசாலையில் வளப்பற்றாக்குறை ஏதாவது உள்ளதாக எனக் கேட்டபோது,

பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை. அருகிலுள்ள தரவையின் மேட்டுப்பகுதியை மழை இல்லாத

**மருதன்**

காலங்களில் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தி வருகின்றோம்.

பாடசாலை வளவு முழுவதும் கற்பாராக உள்ளதால் மரம், செடி, கொடிகளை உருவாக்க முடியவில்லை. ஆகவே கற்பார் அகற்றி செம்மண் நிரப்பி நிலம் அமைக்கப்படல்வேண்டும். ஏனெனில் கோடை காலத்தில் மாணவர்கள் வெப்பத்தால் மிகவும் அவதிப்படுவார்கள். ஆசிரியர்களுக்கு செயற்பாட்டறை, தளபாடங்கள் எதுவுமே இல்லை. மின்சாரம் உள்ளது. ஆனால் கணனி இல்லை. அதனால் மாணவர்களை நவீன உலகியலுடன் இணைத்து வளர்க்கமுடியாதுள்ளது. கற்பார்கள் காரணமாகப் பாடசாலை வளவு எல்லைகளில் கதிகால் போட்டு அவற்றை முளைக்க வைத்து வேலியடைக்க முடியாது உள்ளது. எனவே மதில் கட்டப்படல்வேண்டும் - என்றார் அதிபர்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலையாயினும் குறிப்பிடத்தக்க அடைவுகளை இப்பாடசாலை எட்டி வருவது பாராட்டப்பட வேண்டியதே.



அண்மையில் கல்விச்சுற்றுலா மேற்கொண்ட அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரி மாணவர்கள் உதயனுக்கும் வருகைதந்தனர் அதன் போது எடுக்கப்பட்ட படம்.

## மாகாண மட்டத்தில் முதலிடம்



'அற்லஸ்' நிறுவனம் அகில இலங்கை ரீதியில் நடத்திய சித்திரப் போட்டியில், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி ச.சர்மலா வடமாகாணத்துக்கான முதற்பரிசைப் பெற்றுள்ளார். அனுராதபுரத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கலந்துகொண்டு இவர் வரைந்த ஓவியமே முதற்பரிசு பெற்றதாகும்.

இவர் 'சிலிங்கோ' நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'ரண தழு' சித்திரப் போட்டியிலும், அரச சிறுவர் கலைவிழாவிலும், கல்வியியற் கல்லூரியால் நடத்தப்பட்ட அழகெழுத்துப் போட்டியிலும் பரிசில்கள் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (50-38)



சுவாமி விவேகானந்தர் பற்றிய படக் கண்காட்சி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி சுமித்திரை சிவநாதன் மங்கள விளக்கேற்றிக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் உப அதிபர் திருமதி ருக்மணி இராசரத்தினம், ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2008 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கு மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளையினர் பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் வங்கி உத்தியோகத்தர் த.சுகந்தன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பரிசில் பெற்ற மாணவர்கள் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாறுவோர் இருக்கும்வரை ஏமாற்றுவோரும் இருப்பர்!

## தமிழகத் 'தினமணி' நாளேடு கருத்து

"இலங்கை அரசின் வாய்மூல வாக்குறுதிகளில் இந்திய அரசும், தமிழ்நாடு முதல்வரும் நம்பிக்கை கொண்டிருப்பது புரியாத புதிராகவே உள்ளது"

-இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

'ஏமாற்றாதே ஏமாறாதே' என தலைப்பிட்டு வெளிவந்துள்ள இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :-

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்திலிருந்து கூறப்பட்டுவரும் விடயங்கள்தான் - மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தருவோம், அப்பாவிப் பொதுமக்களை எக்காரணம் கொண்டும் தாக்கமாட்டோம், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தங்கு தடையின்றி நிவாரண உதவிகள் வழங்கப்படும், இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்பனவாகும். இதனைக் கேட்டுக் கேட்டு நமக்கெல்லாம் சலித்து விட்டாலும், இந்திய அரசுக்கும், நமது முதல்வருக்கும் இலங்கை அரசின் வாக்குறுதிகளில் நம்பிக்கை தொடர்வது, எதனால் என் பது புரியவில்லை.

மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற தனது நம்பிக்கை வீண்போகவில்லை என்றும் - மத்திய அரசின் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி அளிக்கின்றன எனவும் முதல்வர் கூறி இருப்பது விசித்திரமாக இருக்கிறது. மத்திய அரசு அப்படி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை. பஸில் ராஜபக்ஷவிடம் பேச்சு நடத்தி, பலமுறை தந்த உதட்டளவு உத்தரவாதத்தை மறுபடியும் மத்திய அரசு பெற்றிருப்பது முதல்வரைத் திருப்திப்படுத்தி இருப்பது ஆச்சரியம்தான்.

அல்லற்படும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பும், பாதிக்கப்பட்டால் நிவாரணமும் தரவேண்டிய கடமை இலங்கை அரசுக்கு உண்டு. அக்கடமையை அது செய்யத் தவறி இருப்பதிலிருந்தே, எந்த அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது என்று நாம் புரிந்து கொள்ளலாம். அவதிப் படும் இலங்கைக் குடிமக்களான தமிழர்களுக்குத் தங்களது செலவில் நிவாரணம் கூடத் தரத் தயாராக இல்லாமல் அதை இந்தியாவிலிருந்து கேட்டுப் பெறுகிறது அந்த அரசு என்றால், நாம் ஏமாளிகளாக இருக்கிறோம் என்றுதானே பொருள்?

தன்மான உணர்வு, சுயமரியாதை என்று ஊருக்கு உபந்நியாசம் செய்யும் முதல்வர், தன்மானமும், சுயமரியாதையும் இல்லாமல் தனது நாட்டுக் குடிமக்களுக்கு அன்னிய நாட்டிடம் நிவாரணம் கேட்கும் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்காமல் இங்கே நிவாரண நிதி திரட்ட முற்பட்டிருக்கிறார். முன்பு, பழ.நெடுமாறன் திரட்டி வைத்திருந்த மருந்துகள் மற்றும் நிவாரணப் பொருள்களை வீணடித்தபோது இல்லாத உத்வேகம், இப்போது திடீரென்று முதல்வருக்கு வந்திருக்கிறதே, அது ஏன்? புரியவில்லை!

விடுதலைப்புலிகள் அப்பாவிப் பொது மக்களை மனிதக் கவசங்களாகப் பயன்படுத்துவதால் அவர்கள், சிலவேளைகளில் பாதிப்புக்கு உள்ளாக நேர்கிறது என்பது இலங்கை அரசின் வாதம். நடத்துவது என்னவோ விமானக் குண்டு வீச்சு. அதில் எங்கிருந்து வருகிறது மனிதக் கவசம் என்று கேள்வி கேட்கக்கூடவா முதல்வருக்கும், மத்திய அரசுக்கும் தெரியாமல் போய்விட்டது?

கிளிநொச்சியில் இருக்கும் ஒரே ஒரு வைத்தியசாலையும் குண்டு வீச்சுக்கு இரையாகி விட்ட நிலையில் மருத்துவ வசதி இல்லாமல் அங்கே அப்பாவிகள் செத்து மடிகிறார்கள். எனவே போர்நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு தான் பேச்சு என்றல்லவா முதல்வர் இந்திய அரசை வற்புறுத்தி இருக்க வேண்டும்.?

இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வு என்று பேசுபவர்கள், முதலில் அதிகாரிகள் மூலம் இந்தப் பிரச்சினையை அணுகுவதை நிறுத்த வேண்டும். இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நன்றாகத் தெரிந்த தமிழக அரசியல்வாதி ஒருவரை உள்ளடக்கிய இந்தியக் குழுவால் மட்டும்தான் இலங்கையின் சமாதானத்துக்கு வழிகோல முடியுமே தவிர, அதிகாரிகளால் முடியாது என்று எடுத்துச் சொல்ல முதல்வர் ஏன் தயங்குகிறார்?

மத்திய அரசை வேதனைக்கு உள்ளாக்கும் வகையில் சிக்கலை உருவாக்க மாட்டோம் என்று முதல்வர் கருணாநிதியும், இலங்கை அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமாட்டோம் என்று மத்திய அரசும் நிலைப்பாடு எடுத்திருக்கும்போது, அங்கே அன்றாடம் செத்து மடியும் அப்பாவித் தமிழர்களுக்கு எப்படி நிவாரணமும் நியாயமும் கிடைக்கும்? நாம் அனுப்பும் நிதியும், நிவாரணமும் இலங்கை அரசால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போய்ச் சேரும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நாற்பதாண்டுப் பிரச்சினையை நான்கு நாள்களில் தீர்க்க முடியாது என்கிற முதல்வரின் கருத்து சிரிப்பை வரவழைக்கிறது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தின்போதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகலின் போதும், மனிதச் சங்கிலி நடத்திய போதும் தெரியாத இந்த உண்மை, மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் வந்தவுடன்தான் முதல்வருக்குத் தெரிந்ததா என்ன? அது போகட்டும். கடந்த ஒன்பது ஆண்டுகளாக மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க. இந்தப் பிரச்சினைக்கு ஏன் தீர்வு காண முயற்சிக்கவில்லை?

பாகிஸ்தானின் முன்னாள் உளவுத்துறைத் தலைவர், கொழும்பில் பாகிஸ்தான் தூதுவராக அமர்ந்து ராஜபக்ஷ அரசுக்கு ஆலோசனை வழங்கி வரும் நிலையில், சீனாவுடன் மிக நெருக்கமான உறவை இலங்கை அரசு வளர்த்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்திய அரசு உதட்டளவு உத் தரவாதத்தை நம்புவது சரியான இராஜதந்திரம் ஆகாது! - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெகுதூரம் பறந்து குண்டு வீசிவிட்டு பத்திரமாக எவ்வாறு திரும்பிச் சென்றனர்?

## புலிகள் விமான மர்மம் பற்றி அதிகாரிகள் ஆச்சரியம்

கொழும்பு, ஒக்.31

மன்னாரிலும் பின்னர் களனிதிஸ்ஸ மின் நிலையத்தின் மீதும் வெகுதூரம் பறந்து தாக்குதல் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் எவ்வாறு பத்திரமாகத் தப்பிச் சென்றன என்பது குறித்து பல்வேறு விதமான கருத்துக்களும் விமர்சனங்களும் இப்பொழுது முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்று விட்டன என்பதை ஒப்புக்கொண்டுள்ள விமானப் படையினர், மன்னாரில் தாக்குதல் நடத்திய விமானம் கொழும்பில் தன் இலக்கைக் குறி வைக்கும் வரை கண்டு பிடிக்க முடியாத வகையில் மறைமுகமாக செயல்பட்டிருந்தது என்ற கூற்றை நிராகரித்து விட்டார்கள்.

பாதுகாப்பு வட்டாரங்களைப் பொறுத்தவரை, குறித்த இரு விமானங்களும் இரணைமடுவிலிருந்து புறப்பட்டு கொழும்பு, மன்னாரை நோக்கி பறந்துள்ளன. முன்னரங்கப் பகுதிகளில் செயல்படும் இராணுவத்தின் 57 அணிப்பிரிவினர் ராடரில் இவ்விரு விமானங்களையும் கண்டு பிடித்து கொழும்புக்கு அறிவித்திருக்கிறார்கள்.

உடனே விமானப்படையினர் எவ்-7, மிக் 24 மற்றும் பி.ரி 6 விமானங்களை செயலில் இறக்கி புலி விமானங்களைத் தாக் கிக் கீழிறக்குவதற்காக அனுப்பி வைத்தனர்.

### மூன்று படையினர் காயம் கட்டடங்களுக்குச் சேதம்

விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜானக்க நாணயக்கார இது பற்றித் தகவல் தருகையில் புலிகளின் ஒரு இலகு ரக விமானம் மன்னார் தள்ளாடி இராணுவத் தளம் மீது இரண்டு குண்டுகளை செவ் வாய்க்கிழமை இரவு 10.20 மணியளவில் வீசியது என்று கூறினார். இராணுவம் வெளியிட்ட தகவலில் தள்ளாடி இராணுவத் தளத்திலிருந்த மூன்று படையினர் சிறு காயங்களுக்கு ஆளாகினர். இரண்டு கட்டடங்கள் சிறு சேதத்துக்குள்ளாகின. பல்குழல் றொக்கட் செலுத்தும் கருவிகளும், ஆட்டிலறி குண்டுகளும் சேமித்து வைக்கப்படும் பகுதியாகும் இது. இதன் மீதே புலிகள் இலக்கு வைத்திருக்கவும் கூடும் என்று தெரிவித்துள்ளார்கள்.

இதையடுத்து இரணைமடுவை நோக்கி ஆட்டிலறி மற்றும் பல்குழல் ஏவுகணைத் தாக்குதல்களையும் இராணுவம் நடத்தியது. புலிகளின் விமானங்கள் இருக்கும் இடம் என்று கருதப்படும் இடத்தை நோக்கியே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இருந்தும் அது தனது தளத்துக்கு பத்திரமாகத் தப்பிச் சென்றுள்ளது.

இதேசமயம் புலிகளின் ஒரு விமானம் கொழும்பை நோக்கி பயணித்துள்ளது. அதே வேளை கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத்தை அண்டிய பகுதிகளிலும் முக்கிய ஏனைய பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது. அதே சமயம் வான்பரப்பின் மீதான தற்காப்புப் பொறி அமைப்பு செயலுக்கு வந்தது.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் பறந்த புலிகளின் விமானத்தை விமானப் படையினர் அவதானித்தே வந்துள்ளனர். தரைப்பகுதியில் அது பறந்த சமயங்களில் பல இடங்களிலும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் அதனை நோக்கி குண்டுகளை வீசின என்று விமானப்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

கடற்படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்துள்ளனர்.

புலிகளின் விமானம் வன்னிக்குத் திரும்பு முன் களனி திஸ்ஸ மின் நிலையத்தின் மீது குறைந்தது இரண்டு குண்டுகளையாவது வீசிச் சென்றுள்ளது. இந்தப் பரபரப்பான சந்தர்ப்பத்தில் 'அலரி மாளிகைப்' பகுதிக்கான வீதிகள் மூடப்பட்டு இராணுவ பாதுகாப்பும் அதிகரிக்கப் பட்டது.

இதற்கிடையில் மின் நிலையப் பகுதியில் மயக்க நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஊழியர் ஒருவர் அடுத்த நாள் காலை யில் ஆஸ்பத்திரியில் மரணமானார். அதிர்ச்சியினால் இவர் மரணமாகியிருக்கலாம் என்று கருதப்பட்டது.

கட்டுநாயக்காவில் இறங்கவிருந்த இரு பிரயாணிகள் விமானங்கள் நிலைமை சீராகும்வரை சென்னைக்குத் திருப்பி அனுப்பப் பட்டிருந்தன.

### தாயும் பிள்ளைகளும் ஹுனுப்பிட்டியில் காயமுற்றனர்

களனிதிஸ்ஸ மின்நிலையம் மீது குண்டு வீசிய விமானங்களை நோக்கிப் படைதரப்பினர் நடத்திய தாக்குதல் காரணமாக ஹுனுப் பிட்டிய, வத்தளைப் பகுதிகளில் ஷெல் விழுந்ததில் ஹுனுப் பிட்டியில் வசிக்கும் ஒரு தாயும் இரு பிள்ளைகளும் காயமடைந்துள்ளனர்.

விமானத் தாக்குதலையடுத்து வன்னிப் பகுதியில் விமான இறங்கு துறைகளைக் கண்டறிய இலங்கை இராணுவ விமானங்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக தமிழ் நெற் இணையத்தளம் கூறியது. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் தரைப்பகுதியை நோக்கி 'பராலைட்' வீசியபடி விமானங் கள் பறந்து தேடுதல் நடத்தின எனத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் விமானங்கள் மன்னார் பகுதிக்கு மேலாகப் பறந்து சென்றன என பொது மக்கள் கூறினார்கள். (ப)

## இந்திய அரசின்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளோ அல்லது அந்த அதிகாரிகளைத் திசைதிருப்ப முயலும் சிங்களத் துதிபாடிகளோ எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டார்கள்.

தென்னாபிரிக்காவில் வெள்ளை அரசு, கறுப்பின மக்களுக்கு எதிராகக் கையாண்ட நிறவெறிக் கொள்கையை ஜவாஹர்லால் நேரு மிகக் கடுமையாக எதிர்த்தார். நிற வெறியைப் பின்பற்றுவது அந்நாட்டின் சொந்தப் பிரச்சினை என அவர் ஒதுங்கி நிற்கவில்லை. 1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி லண்டனில் காமன்வெல்த் பிரதமர்களின் மாநாடு நடைபெற்றபோது ஆசிய - ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பிரத மர்களுக்குத் தலைமை தாங்கி, தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்தார் நேரு. அதுமட்டுமல்ல, நிறவெறிக் கொள்கையை அந்நாடு மாற்றிக்கொள்ளாவிட்டால் காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேற வேண்டும் என அவர் வற்புறுத்தி மற்ற நாடுகளையும் ஏற்க வைத்து தென்னாப்பிரிக்காவை வெளியேற்றினார். அதே மார்ச் மாதம் 13ஆம் திகதியன்று ஐ.நா. பேரவையில் பேசும் போதும் இதே கருத்தை வலியுறுத்தினார். தென்னாபிரிக்காநிறவெறிக்கொள்கையைக் கையாண்டு நீக்ரோக்கள், இந்தியர்கள் ஆகிய கறுப்பின மக்களை ஒடுக்கியது. இலங்கை, இனவெறிக் கொள்கையைக் கையாண்டு தமிழர்களை ஒடுக்கி வருகிறது. நிறவெறிக்கும்

இனவெறிக்கும் வேறுபாடு இல்லை. நிறவெறிக்கு எதிராக நேரு உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டார். ஆனால் சிங்கள இனவெறிக்கு ஆதரவாக மன் மோகன் அரசு நடந்து கொள்கிறது.

பாகிஸ்தானின் ஓர் அங்கமான கிழக்கு வங்கத்தில் திட்டமிட்டு இனப்படுகொலைகளை பாகிஸ்தான் இராணுவம் நடத்திய போது, அது அந்நாட்டின் உள்விவகாரம் எனக் கருதி பிரதமர் இந்திரா ஒதுங்கி நிற்கவில்லை. வங்க மக்களின் துயரம் குறித்தும் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருப்பது குறித்தும் தனது கவலையை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். எந்தப் பயனும் இல்லாத நிலைமையில் இந்திய இராணுவத்தை அனுப்பி வங்க மக்களுக்கு விடுதலை தேடித் தந்தார்.

### வரலாறு புரியாதவர்கள்

எனவே, ஈழத் தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை எனப் பேசுபவர்களும், பக்கம் பக்கமாக எழுதுபவர்களும், வரலாறு புரியாதவர்கள் அல்லர். அவர்கள் வரலாற்றுப் புரட்டர்கள். உண்மைகளை மறைத்தும் திரித்தும் சுயநல நோக்கத்துடன் செயல்படுபவர்கள். இவர்கள் என்றைக்குமே தமிழர்களின் நலன்களைப் பற்றி சிந்திக்காத சிங்களத் துதிபாடிகள் ஆவார்கள். எது உள்நாட்டுப் பிரச்சினை, எது சர்வதேசப் பிரச்சினை - என்பதைப் புரிந்து கொள்ளாமல் குழப்புபவர்கள்.

உலகமே சிறுத்துவிட்ட இந்தக் காலகட்டத்தில், எந்த ஒரு நாட்டின் பிரச்சினையும் அண்டை நாடுகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு உலகம் நெருங்கிப் பிணைந்து விட்ட இந்தக் கால கட்டத்தில், பழைய ஏகாதிபத்திய மனோபாவத்துடன் இவர்கள் பேசுகிறார்கள். பக்கத்து வீட்டில் குடியிருக்கும் கணவன் - மனைவி இடையே நடைபெறும் சச்சரவில் தலையிடுவது நாகரிக மாக இருக்க முடியாது. ஆனால் அந்தக் கணவன், மனைவியைக் கொலை செய்ய அரிவாளுடன் விரட்டும்போது அது அவர்களின் குடும்பப் பிரச்சினை என்று ஒதுங்கிக் கொள்பவன் கோழை - மனித நேயம் அற்றவன். அதைப்போலத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது என்று கூறுபவர்கள் உள்நோக்கம் கொண்டவர்கள். அவர்கள் என்றைக்குமே தமிழர்களுக்கு எதிரிகளாகவே இருப்பவர்கள்.✻

## வேற்றுமையிலும் ஒற்றுமையை உணர்த்துவது இந்து மதத் தத்துவம்

கடவுள் எங்கும் எதிலும் நிறைந்துள்ளவர் என்னும் தத்துவத்தை ஏற்றுக்கொள்பவர் எல்லோரும், பிறரைக் கோபிக்கமாட்டார்கள்; இம்சை செய்யவோ துன்பஞ் செய்யவோ துணியார்கள்; தொல்லைகள், கொடுமைகளைப் பிற உயிர்களுக்குச் செய்யமாட்டார்கள். சமய உண்மைகளை அறிவதுடன், சாதனைகளிலும் காட்டவேண்டும், என்பதே சைவத்தின் நிலைப்பாடு. சாதனையில்லாத போதனையால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. உண்மையென்று உணர்ந்தவற்றை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகும் போதே நல்ல சமயி ஆகின்றோம்.

வேதம், ஆகமம், திருமந்திரம், திருக்குறள், தேவாரத் திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் சாத்திர நூல்கள் என்பன சைவசமயத்தின் புனித நூல்கள். இந்த உலகம் முழுவதிலும் வியாபித்துள்ள கடவுளைப் புரிந்து கொண்டு, அவரின் திருவடிகளை அடைதற்பொருட்டே நமக்கு இந்த மானிட சரீரம் கிடைத்திருக்கின்றது. அவர் அடி சேருதலே மானுடப்பிறவியின் அதி உயர் குறிக்கோள். அதற்குரிய வழி, தர்மம் ஆகும். இவ்வாறு இப்புனித நூல்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவையாவும் இறைவனின் கருத்துக்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஞானக்கதிர்

புறத்திலே எவ்வளவோ வேற்றுமைகள்; ஒவ்வொருவரும் வெவ்வேறு பெயரைத் தாங்கியுள்ளார்கள். ஒருவருடைய குரல் போன்று மற்றவருடைய குரல் இல்லை. இப்படி எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. ஆள்களின் உருவங்கள் பருத்தும், சிறுத்தும், மெலிந்தும், திரண்டும், அழகாயும், அழகின்றியும் இருக்கலாம்; அவர்கள் வெவ்வேறு மொழிகளை பேசுபவர்களாகவோ வெவ்வேறு நிறத்தவராகவோ, நாட்டவராகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரிலும் நிறைந்திருப்பவர் ஒரே கடவுள்தான். இத்துணை வேற்றுமைகளிலும், மக்களிடையே ஒற்றுமையை உணர்த்திக் கொண்டிருப்பது இந்தக் கடவுள்த் தத்துவமே. ஒரே கடவுள்தான் எல்லோரிலும் இருக்கிறார் என்னும் போது, மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்பது உறுதியாகி வருகிறது. ஒரே குலத்திற்குள் ஏற்ற இறக்கங்கள், உயர்வு, தாழ்வுகள் இருக்க நியாய மில்லை. திருமூலரும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றுதான் குறிப் பிடுகிறார். இதைப் புரிந்து கொண்டால், மனித குலத்திற்கு எக்கேடும் ஏற்பட இடமில்லாமல் போய் விடும். சைவநெறி எத்துணை மகத்தானது என்பதற்கு வேறு சான்றே தேவையில்லை.

நன்றி: அருள் ஒளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் நாவாந்துறையை வீழ்த்தி அச்செழு அசத்தியது

## யாழ்.வலய மட்டச் சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு, ஒக்.31

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் வலய மட்டச் சம்பியனாகத் தெரிவானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் விளையாடினார்கள்.

முதல்பாதி ஆட்டம் இரு அணியினரும் கோல் போடாத நிலையில் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணியினருக்கும் சோதனைமிக்கதாக அமைந்தது. வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் கோல்கள் பெறவேண்டும் என்ற நிலையில் இரு அணியினரும் மோதிக்கொண்டனர்.

ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிட நேரத்தில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய முன்னணி வீரன் தனக்கு கிடைத்த பந்தை மிகவும் லாபகரமாக முன்நகர்த்தி, உதைத்து முதல் கோலைப் பெற்றுக்கொண்டார்.

நாவாந்துறை பாடசாலை தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மீண்டும் விளையாடத் தொடங்கிய நிலையில், மேலும் ஒரு கோலைப் பெற்று அச்செழு சைவப்பிரகாச வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டது.

நாவாந்துறை பாடசாலை கோல்கள் பெற பெருமுயற்சி மேற்கொண்டும் பயன் கிடைக்காத நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

சைவப்பிரகாச வித்தியாசாலை 2:1 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை வென்று வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் கொழும்புத்துறை சென்.யோசெப் வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் சென்.யோசெப் வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வென்று 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

# அட்டகிரி வித்தியாலயத்தை வென்று சம்பியனானது மானிப்பாய் இந்து

வலி.வடக்கு,ஒக்.31

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி தொடங்கி முடிவடையும் வரை மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆதிக்கம் செலுத்தியபோதிலும் கோல்கள் பெறவிடாமல் அட்டகிரி சைவ வித்தியாலய வீரர்கள் தடுத்து விளையாடினார்கள். இந்நிலைமையில் முதல்பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்பட்ட நிலையில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. கோல்கள் பெறுவதற்கான முயற்சியில் இரு அணிகளும் தொடர்ந்து ஈடுபட்டன.

இந்நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னணி வீரர் ஒருவர் தனக்குக் கிடைத்த பந்தை உரிய முறையில் உதைத்து ஒரு கோலைப் பெற்று தனது அணியை முன்னணிக்கு கொண்டு வந்தார்.

மேலும் போட்டி வேகம் பெற்று இரு அணிகளும் மாறி மாறி எதிரணியினரின் கோல் பகுதிக்கு பந்தை அடித்தார்கள். இரு அணிகளும் எடுத்த முயற்சிகள் கோல் காப்பாளர், பின்னணி வீரர்களினால் முறியடிக்கப்பட்ட நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயத்தை வெற்றி பெற்றுச் சண்டிலிப்பாய் கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (1-86)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு கப்பம்புலம் பாரதி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியில் சிறுவர்கள் பாண்ட் இசையுடன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.தெற்குப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனை அழைத்துச் செல்லும்போது.... (படம்: கலைஞன்)

# தென்மராட்சிக் கோட்டத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளுக்கான சுற்றுப்போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

14 வயது, 16 வயது, 18 வயது ஆகிய பிரிவுகளுக்கிடையில் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

### 14 வயது பிரிவு

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, மீசாலை வீரசிங்கம் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### 16 வயது பிரிவு

நாவற்குழி ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

### 18 வயது பிரிவு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி ம.வி, நாவற்குழி ம.வி. (1-207)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# நடேஸ்வராக் கல்லூரியை வென்று அருணோதயா கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு,ஒக்.31

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வென்று கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணியினரும் சிறப்பாக மோதிய போதும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் கோல்கள் பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் மத்தியில் விளையாடத் தொடங்கினார்கள். அருணோதயாக் கல்லூரிக்கே கோல்கள் பெறும் வாய்ப்புகள் அதிகம் காணப்பட்டன.

இதனைப் பயன்படுத்திய அருணோதயாக் கல்லூரி முன்னணி வீரர் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார். இந்நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

அருணோதயாக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் நடேஸ்வராக் கல்லூரியை வென்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் மகாஜனக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் மெய்கண்டான் வித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

# சிந்துரவீனின் அபாரமான பந்துவீச்சினால் சென்.ஜோன்ஸ் 'பி'யை வீழ்த்தியது விக்னேஸ்வரா

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவு துடுப்பாட்டப் போட்டி ஒன்றில் சிந்துரவீனின் அபார பந்துவீச்சால், கரவெட்டி விக்னேஸ்வரா வெற்றிவாகை சூடியது.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் விக்னேஸ்வரா இன்னிங்ஸாலும் 45 ஓட்டங்களாலும் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் 25.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கெவின் 14 ஓட்டங்களைப் பெற்றார். விக்னேஸ்வரா வீரர்களான சிந்துரவீன் நான்கு விக்கெட்டுகளையும் மதுசன் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா ஆறு விக்கெட்டுகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் அணித்தலைவர் சஜீவன் 23 ஓட்டங்களைப் பெற்றார். சென்.ஜோன்ஸ் வீரர் அகாலங்கன் மூன்று விக்கெட்டுகளை சாய்த்தார்.

இரண்டாம் இன்னிங்ஸில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சிந்துரவீனின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாத நிலையில் 23 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சிந்துரவீன் 9 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுகளை சாய்த்தார். (1)

# சகல வசதிகளும் கிடைத்தால் யாழ்.வீரர்கள் சர்வதேச ரீதியில் சாதனை படைக்க முடியும்

## தேசிய ரீதியில் பதக்கம் வென்ற கு.கோபிநாத்

அண்மையில் நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலில் இரண்டாமிடத்தைப் பெற்று, யாழ்.மண்ணுக்கும், விளையாட்டுத்துறைக்கும் பெருமை சேர்த்த, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் குணசிங்கம் கோபிநாத், உதயன் வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணல் இது:-

***கேள்வி:*** தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளீர்கள். இது எப்படிச் சாத்தியமானது?

***பதில்:*** எமது பாடசாலையின் உடற்பயிற்சி ஆசிரியர் ச.செல்வக்குமரனும், யாழ்.மாவட்ட உடற்பயிற்சி உத்தியோகத்தர் குணாளகாந்தனும் நீளம் பாய்தல் தொடர்பான நுணுக்கங்களையும், அவசியமான ஆலோசனைகளையும் எனக்குக் கற்றுத் தந்தனர். மேலும் வலய மாகாண, தேசிய மட்டங்களில் என்னோடு கூடவே வந்து இவர்கள் தந்த உற்சாகமும் இந்தச் சாதனையை நான் நிகழ்த்தக் காரணம்.

**நேர்கண்டவர்: வல்லழகனார்**

அத்தோடு எனது பெற்றோர்களும், எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபரும் என்னுடைய வெற்றியின் பங்காளிகளாகச் செயற்பட்டுள்ளனர்.

***கேள்வி:*** வலய, மாகாண மட்டங்களில் பங்கேற்றதற்கும் தேசிய ரீதியில் பங்கேற்றதற்கும் இடையே வித்தியாசத்தை உணர்ந்தீர்களா?

***பதில்:*** நிச்சயமாக. இங்குள்ள ஓடுபாதைகளை விடவும், நான் தேசிய மட்டப் போட்டியில் ஈடுபட்ட ஓடுபாதை புதிதாகவும், எனக்குப் பரிச்சயமற்ற வடிவமைப்பினைக் கொண்டதாகவும் இருந்தது. இதனால் எனது முதலாவது பாய்ச்சல் முறையற்ற பாய்ச்சலாக அமைந்தது. எனினும் என் மனதினைத் திடப்படுத்திக்கொண்டு தொடர்ந்து பாய்ந்தேன். என்னுடைய நான்காவது பாய்ச்சலில் 6.92 மீற்றர் தூரம் வரை பாய்ந்து, தேசிய ரீதியில் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதனை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. 'வர்ண விருது' பெறலாமென்று நினைத்தேனே தவிர, தேசிய ரீதியில் இரண்டாவதாக வந்ததை இப்போது கூட என்னால் நம்பமுடியவில்லை.

***கேள்வி:*** உங்களைப்போல் ஏனைய வீரர்களும் சாதனை படைக்க முடியாதா?



***பதில்:*** நிச்சயமாக முடியும். விளையாட்டு வீரர்களுக்குத் தகுந்த பயிற்சியாளர்களும், நவீன விளையாட்டு நுணுக்க முறைமைகளும் சீராகக் கிடைத்து, பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான சூழலும் அமையப் பெற்றால் எல்லா வீரர்களாலும் சாதிக்க முடியும். கூடவே போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்தால் இன்று தேசிய ரீதியில் சாதனை படைத்த யாழ்.வீரர்கள், நாளை சர்வதேச ரீதியிலும் சரித்திரம் படைக்க முடியுமென நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் மாகாணம் மற்றும் தேசியமட்டத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ், பாரியாருடன் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுடன் படத்தில் காணப் படுகின்றனர்.

(படம்: நேசன்)

## கணித பாட மாதிரி வினாத்தாள் யாழ். வலய அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 31

க.பொ.த (சாதாரண) பரீட்சை யின் இந்த ஆண்டுக்கான கணிதபாட மாதிரி வினாத்தாள்கள் யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

அவற்றை 'சீடி' யில் பதிவு செய்து மாணவர்களுக்கு வழங்குமாறு அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)


## மணிவிழா நாயகனை மாண்புற வாழ்த்தி இன்புறும் இவர்கள்...



### B.A. அருமைநாயகம்

வடபிராந்திய உதவிப் பொது
முகாமையாளர் நாயகமே,
நமக்கு அருமையாய் வாய்த்த நாயகமே;
தோற்றம் போலவே
உயர்ந்த நின் கொள்கைகளால்
ஏற்றமுறும் என்றும்
இலங்கை வங்கி இது திண்ணம்
இலங்கிட வேண்டும் நின்
ஓய்வு நாள் சாந்தியுடன்
எய்திட வேண்டும் நீர்
சிறப்பனைத்தும் பெறவேண்டி
வாழ்த்தி மகிழ்கின்றோம்
வாழிய வாழியவே.

**அன்புடன்**
**முகாமையாளரும், ஊழியர்களும்,**
**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

*மணிவிழா நாயகனை மனதார வாழ்த்தும் இவர்கள்...*

SUNDARSON
JEYA KRISHNA
SRI STORES
SUJIVASH CREAM HOUSE
HI.TECH ELECTRONICS & PHONE SHOP
புகழ் களஞ்சியம்
துர்க்கா பொத்தகசாலை
ROSHAN RESTAURANT
SANRAJ COMPLEX
ANANDAHI TEX
துவாரகன் ஹாட்வெயார்
EQUIP UNIT TRUST
முருகன் வேளான் களஞ்சியம்
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
P.C. POWER UNIT
விதுசன் றேடேர்ஸ் கம்பனி
THAVAM STORES
KATHIRKAMASINGAM & SONS
CHUNNAKAM M.P.C.S. (LTD)
ஸ்ரீகணேஷா ரெக்ஸ்
ஸ்ரீகரன் புக் சென்ரர்
திருக்குமரன் ஹாட்வெயார்
VASANTHIYA ELECTRICALS
தபோதரன்
*NEW TRUST BOOK PARK*
*FINE SELECTION*
சுன்னாகம் வாழ் வர்த்தகப் பெருமக்களும் வாடிக்கையாளர்களும்.


## தமிழ்த் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் செல்வன் த.சஞ்ஜீவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செல்வி மலர் சின்னையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விழாவில் கலை நிகழ்வுகள், விவாத அரங்கம், 'மணாளனுக்கே மாலையிட்டாள்' நாட்டிய நாடகம் என்பன இடம்பெற வுள்ளன. (202-302)

## முன்பள்ளிகளுக்கு சத்துணவுப் பொருள்கள்

கோப்பாய், ஒக்.31

வலி.கிழக்குப் பிரதேசசபை எல்லைக் குட்பட்ட முன்பள்ளிகளுக்குரிய நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய சத்துணவுப் பொருள்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பிரதேச சபையின் பகுதிகளுக்குரிய உப பணிமனைகளில் வைத்து வழங்கப்படவுள் ளன.

குறித்த முன்பள்ளிகள் உப பணி மனைகளில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா கேட்டுள்ளார். (202-72)

## புத்தூர் கிழக்கு வீதி புனரமைப்பு

புத்தூர் கிழக்கு, சொக்கத்திடல் வீதி மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் நிதி உதவியுடன் இந்த வீதி செப்பனிடப் படவுள்ளது. இதனால் மழை வெள்ளத்தால் வீதி சிதைவடையும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளதாக அப்பகுதி பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (202-72)


### தவறிவிட்டது

காரைக்கால் சிவன் கோயிலடி, இணுவில் கிழக்கு என்னும் முகவரியுடைய பொன்ராசா லெனின் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் தவறி விட்டது. (கப்பல் மூலம் திருகோணமலையிலிருந்து யாழ்.வரும் வழியில்) கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P.No: 0777110256

### அதிர்ஷ்டம் அழைக்கிறது பொய்யா மொழி ஜோதிடம்

பல வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கிணங்க தபால் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படும். விவாகமாகி 5 வருடங்களாகியும் சந்தான விருத்தியில்லாதவர்கள், விவாகமாகாதவர்கள், கல்வித் தடைகள் போன்றவற்றிற்கு சாதகத்துடன் எழுதுங்கள். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

குருக்கள்
**பொய்யாமொழி ஜோதிடம்,**
கொல்லங்கலட்டி தெல்லிப்பழை. (79555)

### மணமகன் தேவை

37 வயதுடைய, வெளிநாட்டில் உள்ள (உயர்தர கல்வியுடைய, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த) *M.B.A* பட்டதாரிக்கு மணமகன் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருந்தாதவை திருப்பி அனுப்பப்படும். ஸ்பொன்சரில் அழைக்கப்படும்.

தொடர்பு
ஸ்ரீலஸ்ரீ சு.சிவசண்முகானந்தக்குருக்கள்
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (79556)


## பயன்படுத்த முடியாத நிலையில் மலசலகூடம்

சங்கானை மரக்கறிச் சந்தையில் அமைந்துள்ள பொது மலசல கூடத்தை உரிய முறையில் பாவனையாளர்கள் பாவிக்காததால் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் சந்தைக்கு வருவோர் உட்பட அருகே செல்லும் பாதையைப் பாவிப்பவர்களும் சுகாதாரச் சீர்கேட்டையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகிறார்கள்.

மலசல கூடத்தின் உள்ளே சென்று இயற்கைக் கடன்களை முடிக்க முடியாதுள்ளதாகப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (202-329)


### தேவை

யாழ்.நகரில் இயங்கும் யாழ்.பேபி நீட்ஸ் ஸ்தாபனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள் தேவை. (யாழ்.நகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது).

1.கொம்பியூட்டர் ஒப்பரேட்டர் (பெண்).
2.சிறுவர் உடுப்பு வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண்.
3.பார்மசி வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள்.

நேர்முகத் தேர்வு (02.11.2008) ஞாயிறு காலை 8.30 மணிக்கு
இடம்: **யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி** *(பஸ் நிலையம் முன்பாக)*
*388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (79557)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில்*

### வாகனத் தரிப்பிடத்திற்கான இடம் தேவை

மருத்துவபீட மாணவர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலையின் பிரதான வாயிலுக்கு அண்மையில் (750 மீற்றர் இடைவெளிக்குள்) ஓர் இடம் தேவைப்படுகின்றது. பொருத்தமான இடத்தின் சொந்தக்காரர்கள், இடத்தின் விவரம், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவை அடங்கிய மனு ஒன்றை பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு 13.11.2008ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*(C/555143)* **பதில் பதிவாளர்.**


### 22ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் நாகமுத்து சிவப்பிரகாசம்**


மலர்வு: 05.02.1918 உதிர்வு: 03.11.1986

*திதி: துதியை (31.10.2008)*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சீரணி நாகம்பாள் கோயிலடி,
சண்டிலிப்பாய். (79559) **மனைவி.**

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**அம்பலவாணர் சிவசுப்பிரமணியம்**

தோற்றம்: *15.06.1933* மறைவு: *01.10.2008*

கடந்த 01.10.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.10.2008) வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*டச்சு வீதி,*
கோப்பாய் தெற்கு. (79514) **குடும்பத்தினர்.**

### 9ஆம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணுலகில் 31 * 01 * 1929



விண்ணுலகில் 09 * 11 * 1999

**அமரர் ஆறுமுகம் செல்லையா**

(முன்னாள் அதிபர், மட்டுவில் கோத்தணி, மட்டுவில் (தெற்கு, சாவகச்சேரி)

*திதி: துதியை [31.10.2008]*

*பாசத்துடன் எம்மை பல்கலையும் பயில வைத்து*
*பாரினில் நாம் சிறக்கப் பாடுபட்ட தெய்வமே!*
*பாதியில் எம்மைப் பரிதவிக்க வைத்துவிட்டு*
*ஆண்டுகள் ஒன்பது பறந்தோடி விட்டதப்பா*
*ஆண்டவன் திருவடியில் அமைதியாய் நீங்கள் வாழ*
*ஆண்டாண்டாய் உங்கள் நினைவுடனே பிரார்த்திப்போம்.*

உங்கள் ஆத்ம சாந்திக்கு வேண்டிப் பிரார்த்திக்கும்:

*ஹம்டன் லேன்,*
*வெள்ளவத்தை.* (சி/555129) **மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாமில் 18 இடங்களில் குண்டுவெடிப்பு 50 பேர் உயிரிழப்பு; 300 பேர் படுகாயம்



கவுகாத்தி,ஒக்.31

**அசாம் மாநிலத்தில் நேற்று 18 இடங்களில் இடம்பெற்ற தொடர்குண்டுவெடிப்புக்களில் 50 பேர் பலியாகினர். 300 பேர் வரை படுகாயமடைந்தனர். பொது மக்கள் கூடும் இடங்கள், சந்தைகள் மற்றும் நீதிமன்ற வளாகம் என மொத்தம் 18 இடங்களில் குண்டுகள் வெடித்தன.**

**இந்தக் குண்டுவெடிப்பை உல்பா தீவிரவாதிகளே நடத்தினர் என உளவுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.**

மேலும் இச்சம்பவம் தொடர்பாக வெளியான தகவல்கள் வருமாறு-

பொதுமக்கள் கூடும் இடங்களில் மொத்தம் 18 குண்டுகள் வெடித்தன. இதில் 4 குண்டுகள் தலைநகர் கவுகாத்தி நகரில் வைக்கப்பட்டிருந்தன. 14 சக்தி வாய்ந்த குண்டுகள் பர்பேடா, பான் கைகான், காக்ராஜ்கர் மாவட்டங்களில் வெடித்தன. பகல் 11.30 மணி முதல் 11.45 மணி வரை இந்தக் குண்டுகள் வெடித்தன.

தலைநகர் கவுகாத்தியில் வெடித்த 4 குண்டுகளும் மிக, மிக சக்தி வாய்ந்தவை. குண்டு வெடித்த வேகத்தில் வாகனங்கள் நொறுங்கி தீப் பிடித்து எரிந்தன. கணேஷ் குரி என்ற இடத்தில் நடந்த குண்டு வெடிப்பு மிக, மிக மோசமாக இருந்தது. குண்டு வெடித்த சந்தைகள் போர்க்களம் போலக் காட்சியளித்தன.

கணேஷ்குரியில் உள்ள மாவட்ட நீதிமன்றிலும் குண்டுகள் வெடித்தன. குண்டு வெடிப்புகளில் சிக்கிய சிலரது உடல்கள் கருகி உருக்குலைந்து கிடந்தன. படுகாயம் அடைந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலர் உயிரிழந்தனர்.

நேற்றைய நிலைவரப்படி அசாமில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளில் 50 பேர் ப்லியாகினர் என்றும் 300 பேர் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடியபடி இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் குண்டு கணேஷ் குரி பழச்சந்தையில் வெடித்தது. இதில் அந்த சந்தை முழுவதும் தீப் பிடித்து எரிந்து நாசமானது. 2ஆவது குண்டு வெடிப்பு, துணைப் பொலிஸ் கமிஷனர் அலுவலகம் முன்பு நடந்தது. இதில் பொலிஸாரின் வாகனங்கள் எரிந்தன.

சந்தைகளில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததால் மற்றச் சந்தைப் பகுதிகளில் பொலிஸார் எச்சரிக்கை செய்து உஷார்படுத்தினர். இதன் காரணமாக தலைநகர் கவுகாத்தி முழுவதும் மக்களிடம் பதற்றம் ஏற்பட்டது.

சில இடங்களில் மக்கள் கடும் கோபமடைந்து வீதி மறியலில் ஈடுபட்டனர். பாதுகாப்புக் கொடுக்கத் தவறி விட்டனர் எனக் கூறி பொலிஸார் மீது சரமாரியாக கல் வீச்சு நடத்தினர்.

தொடர் குண்டு வெடிப்பை திரிபுரா புலிப் படையுடன் சேர்ந்து உல்பா தீவிரவாதிகள் நடத்தினர் என்றும் மிக மிக திட்டமிட்டு 20க்கும் மேற்பட்ட இடங்களில் அவர்கள் குண்டுகளை வைத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதில் கவுகாத்தியில் வைக்கப்பட்ட 4 குண்டுகளும் ஆர்.டி.எக்ஸ் கலவையால் செய்யப்பட்டவை. மற்ற இடங்களில் வெடித்த குண்டுகள் சக்தி குறைந்தவை.

உல்பா தீவிரவாதிகளின் 28ஆவது பட்டாலியனைச் சேர்ந்த அல்பா, சார்லி ஆகிய 2 குழுக்கள் இந்தத் தொடர் குண்டு வெடிப்பை நடத்தியுள்ளன என உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

அசாம் மாநிலத்தில் இந்த ஆண்டு நடத்தப்பட்டுள்ள 3ஆவது தொடர்குண்டு வெடிப்பு இதுவாகும். நேற்று நடந்த குண்டு வெடிப்பில் தான் இதுவரை இல்லாத அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பிரச்சினையில் தலையிடும் அதிகாரம் இந்திய அரசுக்கு உள்ளது என்கின்றது பா.ஜ.க.

## தாம் ஆட்சியேறினால் 6 மாதங்களில் தீர்வு ; இல.கணேசன் தெரிவிப்பு



சென்னை, ஒக். 31

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் 6 மாதத்தில் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளதுடன், இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதற்கான அதிகாரமும் இந்திய அரசுக்கு உள்ளது.

- இவ்வாறு பா.ஜ.க. தமிழகத் தலைவர் இல. கணேசன் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் நிவாரணப் பொருள்கள் உண்மையிலேயே அவர்களுக்குப் போய்ச் சேருமா என்பதை எப்படி நம்புவது? அதற்கு என்ன உத்தரவாதம் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் 6 மாதத்தில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. தான் பிரதமருக்கு எடுத்துக் கூறி இருக்க வேண்டும். இந்தக் கடமையைச் செய்ய தி.மு.க. தவறிவிட்டது.

இலங்கையின் இறையாண்மை, ஒருமைப்பாட்டைக் காக்க அந்த நாடு இந்தியாவிடம் ஆதரவு கேட்கும்போது சில நிபந்தனைகளை விதிக்க நமக்கு உரிமை உள்ளது. ஏனெனில் லட்சத்துக்கும் அதிகமான இலங்கை அகதிகளை நாம் பராமரித்து வருகிறோம்.

சில தினங்களுக்கு முன்பு இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, "போரை நிறுத்த வேண்டும், பேச்சைத் தொடங்க வேண்டும் என்று இந்தியா நிர்ப்பந்தம் செய்யவில்லை" என்று கூறியுள்ளார். இலங்கையில் உள்ள தமிழர்களைக் காக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்குச் சேகரிக்கப்படும் நிதி, நிவாரணப் பொருள்கள் அங்குபோய்ச் சேருமா என்ற சந்தேகம் உள்ளது.

சுனாமி நேரத்தில் நாம் கொடுத்த நிவாரண பொருள்கள் இலங்கைத் தமிழர்களுக்குப் போய்ச் சேரவில்லை. எனவே, தற்போது அனுப்ப இருக்கும் நிவாரணப் பொருள்கள் போய்ச்சேரும் என்பதை எப்படி நம்புவது. செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக நிவாரணப் பொருட்களை அனுப்ப மத்திய அரசு அனுமதிக்குமா? நிவாரணப் பொருள்கள் இலங்கைத் தமிழர்களுக்குப் போய் சேருகின்றனவா என்பது தெரியாமல் தமிழக பாரதீய ஜனதாக் கட்சி நிவாரண உதவிகள் வழங்குவதற்கான முயற்சிகளை எடுப்பதாக இல்லை.

இலங்கையில் தற்போது நடைபெறும் உண்மையான நிலைவரம் எதுவும் தெரியவில்லை. எனவே, ஐ.நா சபையின் பார்வையாளர் குழு இலங்கைக்குச் சென்று உண்மை நிலையை அறிந்து அதை மக்களுக்கு எடுத்து கூறவேண்டும்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டிச் செல்லும்போது இலங்கை இராணுவத்தினர் சுட மாட்டார்கள் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியிருப்பது அவரது அறியாமையைக் காட்டுகிறது. ஏனெனில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி எங்கு வேண்டுமானாலும் மீன்பிடிக்கலாம்.

தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசிய திரைப்பட இயக்குநர்கள் அமீர், சீமான் கைது செய்யப்பட்டமைபோல அப்படிப் பேசிய மற்றவர்களையும் கைது செய்ய வேண்டும் - என்றார்.

# நீலிக்கண்ணீர் வடிக்கிறார் மஹிந்த குற்றஞ்சாட்டுகிறார் டாக்டர் ராமதாஸ்



சென்னை, ஒக்.31

ஈழத் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று வாக்குறுதி அளிக்கும் மஹிந்த ராஜபக்ஷ, இத்தகைய உதவிப் பொருள்களை இதுவரையில் முன்நின்று வழங்கிய மனிதநேய அமைப்புகளை எல்லாம் தமிழர் பகுதியில் இருந்து வெளியேற்றி விரட்டியடித்து விட்டு இப்போது ஊரை ஏமாற்றப் பார்க்கிறார். நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

எனவே, இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா முயற்சிக்க வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் காட்டமாகக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு-

முதலைக்கண்ணீர் வடித்தல் என்றால் என்ன என்று இதுவரை புரிந்து கொள்ளாதவர்கள் எல்லாம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரபல ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்திருக்கும் நேர்காணலை ஒருமுறை படித்துப் பார்த்தால் மிக நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு அவர் நீலிக்கண்ணீர் வடித்திருக்கிறார்.

நியாயமான அரசியல் உரிமைகளுக்காகப் போராடி வரும் ஈழத்தமிழர்களை முப்படைகளையும் கொண்டு தாக்கி, அங்கு தமிழினத்தையே பூண்டோடு ஒழிப்பேன் என்ற சபதத்துடன் மூர்க்கத்தனமான போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார். போர்ப்படையினரின் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான தமிழர்கள் அவர்களது சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர்களை எங்களது தமிழ்ச் சகோதரர்கள் என்றும், எங்கள் சொந்த மக்கள் என்றும் நாக்குக் கூசாமல் அழைக்கிறார்.



இப்போது அவர் ஊரை ஏமாற்றப் பார்க்கிறார், நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

அரசியல் சிக்கல்களுக்கு போர்ப்படை தீர்வு எதுவும் இருக்க முடியாது என்று இந்த நேர்காணலில் கூறியிருக்கிறார். ஆம்! சாத்தான் வேதம் ஓதியிருக்கிறது. தமிழக முதல்வர் கருணாநிதியை, இலங்கை ஜனாதிபதி வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

ஆனால், பிளவுபடாத இலங்கையின் கட்டமைப்புக்குள் நியாயமான அரசியல் தீர்வு காண தமிழக முதல்வர் கருணாநிதி விரும்புகிறார் எனவும், அதற்கான அவரது எண்ணங்களையும், திட்டங்களையும் பாராட்டுகிறேன் எனவும் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார். தமிழர்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இதுதான் என்பது முதல்வர் கருணாநிதியின் நிலைப்பாடா? இதற்கு அவர் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட வேண்டும். இதில் தலையிட முடியாது என்று இந்தியா தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது. தட்டிக் கழிக்கவும் நாம் விடக்கூடாது - என்றார்.

# இலங்கை அரசின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டியதே தமிழ் மக்களின் தலையாய கடமை என்கிறார் விஜயகாந்த்



இலங்கைத் தமிழர்கள் மீது அந்நாட்டு இராணுவம் பொழியும் குண்டுகள் இன்னும் நின்றபாடில்லை. எனவே, இலங்கை அரசின் முகமூடியைத் தமிழ்மக்கள் கிழித்தெறிய வேண்டும் - என்று தேசிய முற்போக்குத் திராவிடக் கழகக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு-

இலங்கை அரசு தமிழர் தாயகப் பகுதிகள் மீது வான் படைகள் மூலம் குண்டுமாரி பொழிகிறது. இதன் விளைவாக மருத்துவமனைகள், பாடசாலைகள், மாதா கோவில்கள், இந்துக் கோவில்கள் என்று பொது நிறுவனங்கள் மட்டுமல்ல, பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்களும் பலத்த உயிர்ச் சேதத்திற்கும், பொருள்சேதத்திற்கும் ஆளாகின்றன. இதனாலேயே இலங்கை அரசு போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம்.

ஆனால், இலங்கை அரசோ விடுதலைப் புலிகள் மீதுதான் தாக்குதல் நடத்தப்படுகிறது என்றும், அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை என்றும், ஒரு அப்பட்டமானபொய்யைக் கூறி வருகின்றது. இது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் காரியமாகும்.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற, பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்று முழங்குகின்ற இலங்கை அரசு, உண்மையிலேயே ஜனநாயகத்தை கடைப்பிடிக்கிறதா என்று சிந்திக்க வேண்டாமா? இலங்கை அரசின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டியதே தமிழ் மக்களின் கடமையாகும்.

ஈழத் தமிழர் விடயத்தில் இலங்கை ஜனாதிபதி, கருணாநிதியைப் பாராட்டும் அளவுக்கு அவர் எப்படி [illegible] தமிழ் மக்களுக்குப் புரியும் - என்றுள்ளது.

# இலங்கையில் ஜனநாயகம் பூத்துக்குலுங்க இருதரப்பும் காந்திய வழியில் செல்லவேண்டும்'

## கருணாநிதி தெரிவிப்பு



சென்னை, ஒக். 31

"இலங்கையில் ஜனநாயகம் பூத்துக்குலுங்குவதற்கு, காந்திய வழியில் இருசாராரும் ஒரு இடத்தில் அமர்ந்து பேச்சு நடத்தி நல்லதொரு அமைதியான வழியைக் காணவேண்டும். அதற்கு இந்தியாவோடு சேர்ந்து தமிழகமும் ஒத்துழைக்கத் தயாராகவிருக்கும் என்பதுதான் இன்று எடுக்கப்பட்டுள்ள நிலை.

- இவ்வாறு முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னை சோழிங்கநல்லூரில் ராஜீவ் காந்தி வீதி மற்றும் ஒரகடம் தொழிற்பூங்கா வீதி மேம்பாட்டுப் பணிகளை நேற்றுமுன்தினம் தொடங்கிவைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க. அரசும், மத்திய அரசும் ஒத்துப்போவது என்பது இன்றல்ல, அன்றைக்கே தொடங்கிய ஒன்றுதான் என்பதற்காகத்தான் இந்த ஆதாரங்களை ராஜீவ் பெயரால் ஒரு வீதி தொடங்கப்படும் நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தி.மு.க. அல்லது தமிழக அரசைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எடுத்திருக்கின்ற நிலை, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். நாங்கள் வேறு நிலை எதையும் எடுக்கவில்லை. அன்றைக்கு எந்தக் கொள்கையைக் கொண்டிருந்தோமோ, அதே கொள்கையைத்தான் இன்றைக்கும் கொண்டிருக்கிறோம். போர் இல்லாத சூழ்நிலை இலங்கையில் உருவாக வேண்டும். அமைதி உருவாக வேண்டும். அந்த அமைதியை உருவாக்குவது யாராக இருந்தாலும் சரி. அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அந்த அமைதியை உருவாக்க நாம் மத்திய அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை.

எனவே, ஒற்றுமையாகவே இருந்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று சில பேருக்குச் சந்தேகம், சில பேருக்கு வருத்தம், சில பேருக்குக் கவலை, சில பேருக்கு வேதனை, சில பேருக்கு அருவருப்பு, அதனால்தான் அவர்கள் தேர்தலை மனதிலே வைத்து ஒரு பெரிய பிரச்சினையை அணுகுகிறார்களே அல்லாமல், தமிழர்களை - தமிழ் மக்களுடைய உயிர்களை மையமாக வைத்து இந்தப் பிரச்சினையை அணுகவில்லை.

காந்திய வழியை ஒரு பக்கத்தில் உள்ளவர்கள் கடைப்பிடிப்பது என்பதல்ல, இருசாராரும் அமர்ந்து ஓரிடத்தில் ஏற்கெனவே பேசிய சமரசத்தைப் போல ஒரு நல்ல அமைதியான வழியை அந்த நாட்டில் ஜனநாயகம் பூத்துக் குலுங்கக்கூடிய ஒரு வழியை இருசாராரும் பேசி உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியாவோடு தமிழ்நாடு இருப்பதால் தமிழ்நாடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

ராஜீவ் காந்திக்கும், இலங்கைக்கும் உள்ள தொடர்பு அவர் இலங்கைப் பிரச்சினையால் எந்தளவுக்கு முதலிலே ஒரு முறை தாக்குண்டார் என்பதும், அதற்குப் பிறகு அவர் தன்னுடைய வாழ்வையே தமிழ் மண்ணிலே பகிர்ந்தளித்தார் என்பதும், அவருடைய குருதி இங்கேதான் கொட்டியது என்பதும் மறந்து விடக்கூடிய சரித்திர நிகழ்ச்சி அல்ல.

நாம் நம்முடைய கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்ற காலம் வெகு விரைவிலே வர வேண்டும். அந்தக் காலம்தான் இலங்கையிலே அமைதி ஏற்பட்டது என்ற செய்தி வருகின்ற காலம். அந்தக் காலத்தைக் கொண்டு வருகின்ற வழியாக இன்றைக்கு திறக்கப்பட்டுள்ள ராஜீவ் காந்தி வீதி என்கிற இந்த வழி அமையட்டும். இந்த வழியாக அந்த அமைதி வரட்டும். ராஜீவ் காந்தி வழியிலே இந்தியாவே மகிழ்ச்சியடைக்கூடிய அளவுக்கு இலங்கையில் அமைதி நிலவட்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூகம்பத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு
# பாகிஸ்தானுக்கு உதவத் தயாராகிறது இந்தியா



கள் தெரிவித்துள்ளார்கள்.

பூகம்பம், நிலநடுக்கங்கள் ஆகியவற்றின் தாக்கம் 70கி.மீ வரை உணரப்பட்டது. தலைநகர் குவெட்டாவிலும் தென்கிழக்குப் பகுதியில் 185 கி.மீ தொலைவில் உள்ள ஆப்கானிஸ்தானில் உள்ள கந்தஹார் நகரிலும் இது உணரப்பட்டதாக அமெரிக்க நிலவியல் துறை தெரிவித்துள்ளது.

குவெட்டா, ஜியாரத், பிஷின், கிலா,சிபி, போலன், மஸ்துங், குச்லக், லோராலாய் ஆகிய பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இதில் ஜியாரத் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில்தான் 190 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என மாவட்ட மீட்பு ஒருங்கிணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பகுதியில்தான் ஓய்வு இல்லங்கள் அதிகம் உள்ளன. இதை உருவாக்கிய பெருமை பாகிஸ்தான் தந்தை முஹம்மது அலி ஜின்னாவையே சாரும்.

அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் தூங்கிக்கொண்டிருந்த பலரும் வீடுகளை விட்டு வெளியேறினர். மீண்டும் வீடுகளுக்குச் செல்லப் பயந்து பலரும் வீதிகளில் தங்கியுள்ளனர்.

ஜியாத் பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்தன. இராணுவம், துணை இராணுவம் ஆகியவை இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. ஹெலிகொப்டர் மூலமும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார். உரிய நிவாரண உதவிகளைச் செய்யுமாறும், மருத்துவ வசதிகளை அளிக்குமாறும் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகத்தினருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் காஷ்மீர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது ரிச்டர் அளவுகோலில் 7.6 அலகு பதிவானது. அப்போது 74 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதற்கு முன்னர் 1935 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பலர் உயிரிழந்த சம்பவத்துக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்கள், மருந்துகளை அனுப்ப இந்தியா தயாராக உள்ளதாகவும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தாக்கம் 5 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. பின்னர் காலை 5.10 மணியளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இப்பூகம்பம், நிலநடுக்கங்கள் ஆகியவற்றின் அனர்த்தங்களால், துயின்று கொண்டிருந்த ஏராளமானோர் இடிபாடுகளுக்குள் சிக்கிப் பலியாகியுள்ளனர். மண்சரிவுகளால் பாறைகள் புரண்டு விழுந்தும் பலரது உயிரைப் பறித்துள்ளன என மீட்புப்பணியாளர்

# பீனிக்ஸ் விண்கலத்தின் மின் கட்டுப்பாட்டில்!

வாஷிங்டன்,ஒக்.31

செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட பீனிக்ஸ் விண்கலத்தின் மின்சாரத்தைச் சேமிக்கும் பொருட்டு, அதன் கருவிகளின் இயக்கத்தை விஞ்ஞானிகள் நிறுத்தி வைத்துள்ளார்கள்.

இந்த விண்கலம் கடந்த மே மாதம் செவ்வாய்க்கிரகத்தில் தரையிறங்கியது. அங்கு சூரிய ஒளி மிகக் குறைந்த நேரத்துக்கு மாத்திரமே கிடைக்கிறது. இதனால் மின்சாரத்தை மிச்சம் பிடிப்பதற்காக, அதன் கருவிகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ரோபோட்டிக் கையை சூடாக்குவதற்குப் பயன்படும் வெப்பமூட்டல் கருவியின் இயக்கத்தை நிறுத்துவதற்கான கட்டளையை, தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்தே பொறியியலாளர்கள் பிறப்பித்தார்கள்.

இதன் மூலம் தினம் 250 வோல்ட் மின்சாரம் சேமிக்கப்படும். அடுத்தடுத்த வாரங்களில் மேலும் மூன்று வெப்பமூட்டல் கருவிகளின் இயக்கமும் நிறுத்தப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த விண்கலம் 3 மாதங்களுக்கு மாத்திரமே தகவல்களை பூமிக்கு அனுப்பி வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இதற்கு மாறாக, இது 5 மாதங்கள் தகவல்களை அனுப்பி வந்துள்ளது.

# பிளேயர் பேச்சுக்குக் கட்டணம் ரூ. 36 கோடி

லண்டன்,ஒக்.31

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் சிறந்த பேச்சாளர் ஆவார். நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்துள்ளார். எனவே அவரது பேச்சைக் கேட்க ஏராளமான கூட்டம் திரள்வதுண்டு.

இதைப் பயன்படுத்திக் கொண்ட ரொனி பிளேயர் பிரதமர் பதவியிலிருந்து விலகியதும் முழு நேர பேச்சாளராகி விட்டார். இதற்காக அதிக அளவில் கட்டணமும் கேட்கிறார். ஒன்றரை மணிநேரம் சொற்பொழிவாற்ற ரூ. 36 கோடி கட்டணம் (இலங்கை மதிப்பில்) வசூலிக்கிறார்.

உலகிலேயே சொற்பொழிவுக்காக அதிக கட்டணம் வசூலிப்பவர் ரொனி பிளேயர் தான். அவர் பிரதமராக இருந்த போது கிடைத்த வருமானத்தை விட இப்போது 6 மடங்கு சம்பாதிக்கிறார். கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் ரூ 2880 கோடி சம்பாதித்துள்ளார்

வர்த்தகம், பங்குச் சந்தை முதலீடு, வங்கி வணிகம் போன்ற விஷயங்களில் ரொனி பிளேயர் நிபுணர் ஆவார். இந்தச் சொற்பொழிவுக்குத் தான் அதிக பணம் கிடைக்கிறது. அடுத்த சொற்பொழிவுக்காக ஏராளமானோர் அவரை பதிவு செய்துள்ளனர். இதனால் இன்னும் 2 ஆண்டுகளுக்கு ரொனி பிளேயருக்கு நிகதியே இல்லை.

# ஆப்கான் கலாசார அமைச்சில் குண்டுத்தாக்குதல; 5 பேர் பலி



காபூல்,ஒக்.31

ஆப்கானின் தலைநகரான காபூலிலுள்ள ஆப்கான் தகவல் தொடர்பு,கலாசார அமைச்சில் நேற்று வியாழக்கிழமை, தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமடைந்தனர்

இக்குண்டுத்தாக்குதலில் அமைச்சுக் கட்டடத்தின் ஒரு பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது. காபூலிலுள்ள அமைச்சுக் கட்டடங்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இங்கு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என அமைச்சு வட்டாரம் வியப்புத் தெரிவித்தது.

மூன்றுபேர், தங்களுக்கிடையே சண்டையிட்டவாறு, பாதுகாப்பு கடவையைக் கடந்து வந்தனர். அவர்களில் ஒருவரே, தான் மறைத்து வைத்திருந்த குண்டை, கட்டடத்துக்குள் வெடிக்க வைத்துள்ளார் என அமைச்சின் ஊழியரொருவர் பி.பி.சி நிருபர் ஐயன் பெனலிடம் தெரிவித்தார்.

இந்த அமைச்சகம் ஆறு மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் இயங்குகிறது. குண்டு வெடித்ததும், அதன் தாக்கத்தால், பல ஜன்னல்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அடுத்துள்ள கட்டடங்களின் ஜன்னல்களும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இக்குண்டுத் தாக்குதலை அடுத்து அமைச்சுக்குள்ளும் புறமும் பதற்றம் நிலவியது. உடனடியாக பொலிஸார் விரைந்து வந்து, அப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். மற்றுமிரு குண்டுதாரிகளும் அப்பகுதியில் இருக்கலாமென்ற சந்தேகம் வலுத்துள்ளது என நிருபர் குறிப்பிட்டார்.

# 5 தற்கொலைத் தாக்குதலில் சோமாலியாவில் 28 பேர் பலி

கர்செய்சா,ஒக்.31

ஆபிரிக்காவிலுள்ள சோமாலியாவின் வட பகுதியில், ஒரே நாளில், ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 5 தற்கொலைத் தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டனர் என அரசு தரப்பு தெரிவித்தது.

இத்தற்கொலைத் தாக்குதல்களுக்கு ஹர்கெய்சா நகரில் 25 பேரும், பொசாசோ நகரில் 3 பேரும் பலியாகியுள்ளனர். இத்தாக்குதல்களுக்கு இது வரை எந்த ஒரு தீவிரவாதக் குழுவும் உரிமை கோரவில்லை என்றும் அது விவரித்தது. சோமாலிய இடைக்கால அரசுக்கு எதிராக இஸ்லாமிய தீவிரவாதிகள் போராடி வருகிறார்கள். இவர்களின் தாக்குதலுக்கு அப்பாவிப் பொது மக்களே பெரும்பாலும் பலியாகி வருகிறார்கள். இவர்களில் பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர் என்றும் அது சுட்டிக்காட்டியது.

உலக அரங்கில்

# சுரங்க வெடிவிபத்தில் சீனாவில் 29 பேர் பலி

பீஜிங்,ஒக்.31

சீனாவிலுள்ள செஞ்சாங் என்னுமிடத்தில் நிலக்கரிச் சுரங்கமொன்று, எரிவாயு உருளை வெடித்தமையால் இடிந்து விழுந்தது. இதில் 29 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரோடு புதையுண்டனர் என உத்தியோக பூர்வ சிங்குவா செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சீனாவில் அடிக்கடி இதேபோல நிலக்கரி சுரங்கங்களில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டு மட்டும் சுரங்க விபத்தில் 3786 பேர் பலியாகியுள்ளனர்.

# பராக் ஒபாமா வெற்றிபெற்றால் எதிர்க்கட்சியினரும் அமைச்சராகலாம்



"நான் வெற்றி பெற்றால், எனது அமைச்சரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடம் அளிப்பேன்" என அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா, புளோரிடாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"நான் வெற்றி பெற்றால் அமைக்கப் போகும் அமைச்சரவை குறித்து பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறேன். எனது அமைச்சரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடம் அளிப்பேன். நாட்டின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு அவர்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கப்படும்.

"ஆனால் யார் - யாரை பதவியில் அமர்த்துவது என்பது பற்றி இப்போதே சொல்ல முடியாது. நான் தினசரி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த மாட்டேன். நீண்ட கால திட்டங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்படுவேன்.

"ஈராக், ஆப்கானிஸ்தான் பிரச்சினைகளில் நானே துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு களத்தில் குதிக்கப் போவது இல்லை. [illegible] கத்தின் போது [illegible] தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

# தலாய்லாமாவுடன் பேச சீன அரசு மீண்டும் முயற்சி

பீஜிங்,ஒக்.31

திபெத் விவகாரம் தொடர்பாக ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா தரப்புடன் மீண்டும் பேச்சு நடத்த சீன அரசு முன்வந்துள்ளது.

இந்தப் புதிய பேச்சுகளில் சாதகமான பதிலைத் தெரிவிக்குமாறு தலாய்லாமாவிடம் சீனா கேட்டுக் கொண்டுள்ளது.

ஒலிம்பிக் தீப ஓட்டத்தின் போது திபெத்தில் பெரும் கலவரம் வெடித்தது. அப்போது நூற்றுக்கணக்கான திபெத்தியர்கள் கொல்லப்பட்டனர் என புகார் எழுந்தது.

அதைத்தொடர்ந்து திபெத்தின் எதிர்காலம் குறித்து புத்தமதத் தலைவர் தலாய் லாமாவின் பிரதிநிதிகளுடன் சீன அரசு பேச்சுகள் நடத்தியது. இதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில் தலாய்லாமா அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், சீன அரசு திறந்த மனதுடன் பேச்சு நடத்த முன்வந்தால் மட்டுமே மீண்டும் பேச்சுகளில் பங்கேற்போம் என்று



குறிப்பிட்டிருந்தார்.

சீன மக்கள் மீது தனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் சீன அரசு மீதான நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்றும் அவர் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தலாய் லாமாவுடன் 3 ஆவது சுற்று பேச்சுகளுக்கு தயாராக இருப்பதாகவும் சீன அரசு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் சிலிண்டர் ஏற்றிச்சென்ற லொறி வவுனியாவில் தடுத்துவைப்பு

## ளிநொச்சி நோயாளர்கள் உயிரிழக்கும் அபாயம்

கிளிநொச்சி, ஒக். 31

நொச்சி வைத்தியசாலைக்குத் யான 52 'ஒட்சிசன்' சிலிண்டர்கள் லொறி ஒன்றை இராணுவத் வாரத்துக்கும் மேலாக வவுனி த்து வைத்திருக்கின்றனர்.

அந்த வைத்தியசாலையில் றும் அவசர நோயாளர்கள் த எதிர்கொள்ளவேண்டிய சூழ் பட்டிருக்கிறது.

னக் குண்டுவீச்சுகள் மற்றும் ஷெல் வீச்சுகளில் காயமடைந்து சிகிச்சைக்காக எடுத்துவரப்படும் மக்கள் உயிரிழக்க வேண்டிய அபாயம் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

கிளிநொச்சி வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் அடங்கிய மேலும் இரு லொறிகள் ஒருவார காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் கடந்த திங்கட்கிழமை வன்னி செல்ல அனுமதிக்கப்பட்டன.

எனினும், ஒட்சிசன் சிலிண்டர்கள் ஏற்றப்பட்ட லொறிக்கு இன்னமும் படையினர் அனுமதி வழங்கவில்லை. கிளிநொச்சி வைத்தியசாலையில் தற்போது ஒட்சிசன் கையிருப்பு முற்றாகத் தீர்ந்துவிட்டது. முல்லைத்தீவு வைத்திய சாலையிலும் இதே நிலைதான். அங்கும் ஒட்சிசன் சிலிண்டர்கள் மற்றும் சில முக்கிய மருந்துகள் தீர்ந்துவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வாழைச்சேனையில் இளைஞர் கொலை

மட்டக்களப்பு, ஒக். 31

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 9.50 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை, களுவங்கேணி, அண்ணா வீதியைச் சேர்ந்த ஜேக்கப் றொபின்ஷன் (வயது 25) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்களே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

## லிம்கள் வெளியேற்றப்பட்ட ளயொட்டி துவாப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக். 31

டக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளி ப்பட்ட 18ஆவது நினைவு தினத்தை னவு கூர்ந்து இன்று யாழ். முஹம் ா ஜும்மா பள்ளிவாசலில் ஜும்மாத் ழுகையின் பின் விசேட தொழு ம் துவாப் பிரார்த்தனையும் இடம் வுள்ளன.

பள்ளி வாசல்களின் ஒன்றியத்தின் ஏற் டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## மானிப்பாய் கிளையில் "ஏ.ரி.எம்." சேவை ஆரம்பம்

நவாலி, ஒக். 31

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் முதலாவது ன்னியக்க பணப் பரிமாற்று இயந்திரம் (ஏ.ரி.எம்) கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது

வங்கிக் கிளை முகாமையாளர் க.லட்சுமண ர்மா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் பரிமாற்று இயந்திரத்தை இயக்கி வைத்தார். (1-100)

# இலங்கை இந்தியாவிடம் பூரண சரணாகதி; நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஆப்பு வைப்பு!

## குமுறுகிறார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ

கொழும்பு,ஒக். 31

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் சந்திப்பைத் தொடர்ந்து இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையே எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் காரணமாக இலங்கை இந்தியாவிடம் முற்றாக சரணடைந்து விட்டதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கையின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், சர்வதேச நாடுகளிடம் இவ்வாறு சரணடையும் இலங்கை அரசுக்கு எதிராகவும் இலங்கையை மேலும் மேலும் அடி பணியவைக்கும் இந்தியாவுக்கு எதிராகவும் மக்களுடன் சேர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக ஜே.வி.பி எச்சரித்துள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று ஜே.வி.பி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவே இவற்றைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் தமிழ்நாட்டில் எழுந்த போராட்டத்தைத் தடுப்பதற்காக பஸில் ராஜபக்ஷ மேற் கொண்ட நடவடிக்கை எமது நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக அமைந்துவிட்டது.

பஸில் ராஜபக்ஷவிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்குமிடையிலான சந்திப்பைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் காணப்படும் பல விடயங்கள் இலங்கையில் யுத்த நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. எமது நாட்டின் இறைமைக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவின் அழுத்தம்

அதாவது 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து அத்திருத்தச் சட்டத்திற்கு அப்பாலும் சில விடயங்களை நடைமுறைப்படுத்த இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. இலங்கையும் அதற்கு இணங்கியுள்ளது.

அடுத்ததாக, வன்னி அகதிகளுக்கு 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்பும் இந்தியாவின் விருப்பத்திற்கு இலங்கை இடம் கொடுத்துள்ளது.



இதன் மூலம் இலங்கை அரசு வன்னி அகதிகளைக் கவனிக்கவில்லை என்று சர்வதேச நாடுகள் கருதுகின்றன.

உண்மையில், இலங்கை அரசு தொடர்ச்சியாக வன்னிக்கு உணவுப் பொருள்கள் அனுப்பிக் கொண்டு வருவதை நாம் நன்கு அறிவோம். இந்தியாவின் இந்த விருப்பத்தை பஸில் ராஜபக்ஷ நிராகரித்திருக்க வேண்டும்.

வன்னியில் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்குப் புலிகள் தடை ஏற்படுத்தி வருகின்றனர். இதைப்பற்றி பஸில், பிரணாப் முகர்ஜியிடம் எடுத்து கூறவில்லை.

### இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சி

இதனால். உணவு விநியோகத்துக்கு படையினரே தடை ஏற்படுத்தி வருகின்றனர் என்று சர்வதேச நாடுகள் நினைக்க வாய்ப்புண்டு.

இவ்வாறு பல விடயங்களில் இந்தியாவின் அழுத்தத்திற்கு அடிபணிந்து இலங்கையைக் காட்டிக்கொடுத்துவிட்டது இலங்கை அரசு.

அது மாத்திரமின்றி, இந்தக் கூட்டறிக்கையை இந்தியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் பிளக் கூறியுள்ளார்.

இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையை அந்நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சி செய்கின்றமை இதன் மூலம் தெளிவாகிறது.

இதற்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம். இந்நாடுகளின் சதித் திட்டத்திற்கு எதிராகவும் இலங்கை அரசின் அடிமைத்தனத்திற்கு எதிராகவும் நாம் மக்களுடன் சேர்ந்து உரிய நடவடிக்கையில் ஈடுபடுவோம் - என்றார். (சி)

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழகத்தில் இன்றுமுதல் போராட்டங்கள்

சென்னை, ஒக். 31

* இலங்கையில் யுத்தநிறுத்தம் ஏற்படுத்த வேண்டும்.
* தடைப்பட்டுப் போன சமரசப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்க வேண்டும்.
* அமைதிப் பேச்சுக்களில் இந்தியாவும் பங்குபற்ற வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து தமிழக வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழகம் எங்கும் இன்று கடையடைப்புப்போராட்டம் நடத்தப்படவிருக்கிறது.

தமிழகம் எங்கும் வர்த்தக நிலையங்களைப் பூட்டி இடம்பெறும் இந்தப் போராட்டத்தை ஒட்டி வேலூரில் ஆர்ப்பாட்டமும் நடத்தப்படவிருக்கிறது.

அத்துடன் போர்நிறுத்தம் ஏற்படவேண்டும் என்று வலியுறுத்தி சுவரொட்டிப் போராட்டம் ஒன்றையும் வணிகர் கழகம் முன்னெடுக்கவிருக்கின்றது.

### திரைப்படத் துறையினர் நாளை உண்ணாவிரதம்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து திரைப்படத் துறையினர் நாளை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

ரஜனிகாந், கமலஹாசன் உட்பட முன்னணி நடிகர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இந்தப் போராட்டத்தின் போது ஒலிபெருக்கி பாவிக்கக் கூடாது என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எதிர்வரும் ஆறாம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்த இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்த நிறுதத்தை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 11ஆம் திகதி தமிழக தொழிலாளர் முன்னணியினால் ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (01-ரி)

# இந்திய மருத்துவர்கள் வன்னி செல்வது பற்றி புதுடில்லியில் எதுவுமே பேசப்படவில்லையாம்!

## பஸில் ராஜபக்ஷ திடீர் 'பல்டி'

வன்னியில் உள்ள மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, இந்திய மருத்துவர்களுக்கு அனுமதியளிப்பது குறித்து தனது சமீபத்தைய புதுடில்லி விஜயத்தின் போது ஆராயப்படவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இணையத்தளமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

வன்னி மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்தியா மருத்துவர்களை அனுப்புகின்றதா என்று கேட்கப்பட்டபோது, "அதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதியளவு மருத்துவர்கள் இலங்கையில் உள்ளனர்." - என அவர் குறிப்பிட்டார். இந்திய அதிகாரிகளுடன் இது குறித்து தாம் ஆராயவில்லை என்றும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

"வடபகுதி மக்களுக்கு இந்தியா மருந்துப் பொருள்களை வழங்க விரும்புகின்றது. அதேவேளை, இலங்கை அரசு தொடர்ச்சியாக மருத்துவ வசதிகளை வழங்கிவருகிறது. தமிழ்நாடு அரசு வடபகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவியை வழங்குவதற்கு முன்வந்துள்ளமையை நாம் வரவேற்கிறோம். ஆனால், தமிழகத்திலிருந்து வன்னிக்கு மருத்துவர்கள் வந்து சேவையாற்றுவது குறித்து நாங்கள் எதுவும் பேசவில்லை. அது அவசியமற்றதும் கூட!" - என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# தரம் 5 "வெற்றித் தேர்வு" மாணவர்கள் கௌரவிப்பு விழா நவ. 9 இல்

யாழ்ப்பாணம், ஒக். 31

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னோடியாக நடைபெற்ற "வெற்றித்தேர்வு" கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களில் புலமைப்பரிசில், பெறும் மாணவர்கள் நூறு பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பதக்கங்களை மக்கள் வங்கி வழங்குகிறது. தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஈ.எஸ். பேரம்பலம் அன் சன்ஸ் நிறுவனத்தினர் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்வில் பரிசில் பெறும் மாணவர்கள் பயின்ற பாடசாலை அதிபர்களும், பயிற்றுவித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்படுவர்.

இது தொடர்பான கௌரவிப்பு விழா எதிர்வரும் நவம்பர் ஒன்பதாம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற உள்ளது.

ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் [illegible] பிள்ளை தலைமையில் நடைபெறும் கௌரவிப்பு விழாவில், மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ஏ.சி.ஆனந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மக்கள் வங்கியின் யாழ்.உதவிப்பிராந்திய முகாமையாளர் எஸ்.ஹென்றி கௌரவ விருந்தினராகப் பங்கு பற்றுவார்.

கௌரவிப்பு நிகழ்வில், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.முகாமையாளர் வி.அருளானந்தம், உதயன் நிறுவனத்தின் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கு கொள்வர்.

ஈ.எஸ்.பேரம்பலம் அன் சன்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி இ.சாந்தன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செல்வி மலர் சின்னையா ஆகியோர் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இந்த மாணவர் கௌரவிப்பு விழா உதயன் ஊடக அனுசரணையுடன் நடத்தப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற அவதூறு விசாரணையை ரணிலுக்கு எதிராக நடத்த முடிவு

## அவரின் பூர்வாங்க ஆட்சேபனையை நிராகரித்து உத்தரவு

கொழும்பு, ஒக். 31

ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் மங்கள சமரவீரவுடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தம் தொடர்பாகத் தமக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தை ஏமாற்றும் விதத்தில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடந்துகொண்டாரா என்பது குறித்து விசாரணை செய்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது.

அவ்வாறு மாவட்ட நீதிமன்றம் தமக்கு எதிராக நீதிமன்ற அவதூறு வழக்கு விசாரணை ஒன்றை முன்னெடுக்க முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க சார்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபனை குறித்து விசாரணை நடத்தித் தீர்ப்பளித்தபோதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

இவ்விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க சார்பில் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை நிராகரித்து நேற்றுத் தீர்ப்பளித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சிசிர ரத்னாயக்க மேற்படி விடயத்தை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் நீதிமன்றுக்கு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ரணில் - மங்கள சமரவீர உடன்படிக்கையை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி உறுப்பினர்களான அனில்குமார விஜேசிங்க, அனுர பஸ்தியான் ஆகியோர் மனு ஒன்றைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

ஐ.தே.கட்சியின் உரிய அதிகாரக் குழுக்களினால் அங்கீகரிக்கப்படாத ஒரு விடயம் தொடர்பில், ஐ.தே.க. தலைவர் என்ற முறையில் ரணில் விக்கிமசிங்க வெளியார் ஒருவருடன் கட்சிவிடயம் குறித்து ஒப்பந்தம் செய்தமை தவறு என்றும் -

ஆகவே, அந்த ஒப்பந்தத்தை சட்ட செல்லுபடியற்றது என நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என்றும் -மனுதாரர்கள் தமது மனுவில் கோரியிருந்தனர்.

அந்த மனுவுக்கு எதிர்மனுதாரரான ரணில் விக்கிரமசிங்க சார்பில் பதில் மனுவும் சத்தியக்கடதாசியும் தாக்கல் செய்யப்பட்டன.

அந்தச் சத்தியக் கடதாசியில் உண்மைக்கு மாறானவற்றைத் தெரிவித்து, நீதிமன்றைத் தவறாக வழிநடத்தி, நீதிமன்ற அவதூறுக் குற்றத்தை ரணில் விக்கிரமசிங்க இழைத்துவிட்டார் என்று மனுதாரர்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

இதுபற்றிய விடயம் நீதிமன்றில் ஆராயப்பட்டபோது எதிர்மனுதாரரான ரணில் தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனை கிளப்பப்பட்டது. சட்டச் சிக்கல் ஒன்றில் தான் நீதிமன்றம் தலையிடலாம். அரசியல் விவகாரம் ஒன்றில் தலையிட முடியாது என்று ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் நீதிமன்றம் தலையிட முடியும். எனவே எதிர்மனுதாரரான ரணில் விக்கிரம சிங்க நீதிமன்ற அவதூறு குற்றம் இழைத்தாரா என்பது குறித்து நீதிமன்றம் விசாரணை நடத்தலாம் - என்று மாவட்ட நீதிபதி அறிவித்தார். (அ-சி)

### பட்ஜெட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன் நின்று நடத்தும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா.

தேசிய ஊழியர் சேவை சங்கத்தின் மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவற்றைக் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு :-

இலங்கை அரசு 2009ஆம் ஆண்டுக்கான போலிவரவு - செலவுத்திட்டம் ஒன்றை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இந்த நாட்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்கக் கூடிய யோசனைகள் எவையும் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைப் பாதுகாக்க நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் பாதிப்புக்குள்ளாக்கும் யோசனைகள்தான் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளன.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அதிக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அவற்றுள் ஒன்றுகூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் இப்போது சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகளையும் எம்மால் நம்பமுடியாது.- என்றார். (சி)

### நடிகர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் ஆவேசமடைந்த ரஜினி 'உதைக்கணும்' என்றெல்லாம் பேசினார். இதனால் குசேலன் என்ற படமே பலியானது. இதனாலேயே இந்த நிபந்தனை வைக்கப்பட்டது.

இன்னொரு பக்கம் இராமேஸ்வரம் பேரணியில் வரம்பு மீறிப் பேசியதற்காக இயக்குநர்கள் சீமானும், அமீரும் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது.

பெரிய நடிகர்கள் என்ன பேசினாலும் அது அரசியலாக்கப்படுவதால், இந்த முறை இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நாளை நடக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஒலிவாங்கி (மைக்) வைத்துப் பேசுவதையே அடியோடு தவிர்த்துவிட்டால் என்ன என்று கமல்ஹாசன் நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாருக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

ரஜினிக்கும் இந்த யோசனை சரியாகப் படவே, பேசச் சொல்லி வற்புறுத்தாதீர்கள் என்ற நிபந்தனையோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கச் சம்மதித்துள்ளார் என நடிகர் சங்க நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை நடிகர் சத்தியராஜை அடக்கி வாசிக்குமாறு தமிழக முதல்வரிடமிருந்தே அறிவுரை வந்திருப்பதாக நடிகர் சங்கம் தரப்பில் கூறப்படுகிறது. பிரச்சினைக்குரிய விவகாரம் குறித்தும் நடிகர்கள் பேசவேண்டாம் என்றும், உணர்வைத் தெரிவித்தால் மட்டும் போதும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் மத்திய அரசுக்கு பிரச்சினை ஏற்படுத்தும் வகையில் இனி தமிழக அரசு நடந்து கொள்ளாது என சமீபத்தில் முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த அறிவுரை அனுப்பப்பட்டுள்ளதாக வேறு ஒரு தகவல் தெரிவித்தது(அ-01)

(மற்றொரு செய்தி 15ஆம் பக்கத்தில்.)

### வன்னிவிளாங்குள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

ஸ்ரீலங்காப் படையினர் இரு முனைகளில் விடுதலைப் புலிகளின் முன்னரண்களை கைப்பற்றும் முயற்சியினை மேற்கொண்டனர்.

இம் முன்நகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்களை முற்பகல் 11 மணிவரை நடத்தி படையினரின் முயற்சியினை புலிகள் முறியடித்தனர்.

விடுதலைப் புலிகளின் முறியடிப்புத் தாக்குதலை அடுத்து படையினர் தமது நடவடிக்கைகளை கைவிட்டு பின்வாங்கிச் சென்றனர்.

இதில் ஐந்து ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலின் போது படையினரிடமிருந்து படையப் பொருள்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. - என்றுள்ளது. (அ-1)

### விமான, பீரங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்குண்டுவீச்சின்போது அப்பிரதேசத்தில் அமைந்திருந்த இரு முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறுவர்களும் வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் பயப்பீதியினால் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இப்பாடசாலை மாணவர்கள் பதுங்கு குழிகளுக்குள்ளும் வீதியோரங்களிலும் பற்றைகளுக்குள்ளும் பாதுகாப்புத்தேடி விழுந்து படுத்தனர்.

இலங்கை அரசு இந்திய மத்திய அரசிற்கும், தமிழ்நாட்டிற்கும், பொது மக்கள்மீது தாக்குதல்களை தாம் மேற்கொள்வதில்லை எனக்கூறி ஒருசில நாள்களுக்குள்ளேயே மக்கள் குடியிருப்புக்கள் மீது பரந்தனிலும், வள்ளிபுனத்திலும் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளது.

அத்தோடு கிளிநொச்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பல மக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் வீடுகள் சேதமடைந்தும் உள்ளன. கடந்த புதன்கிழமை நடந்த பீரங்கித்தாக்குதலின்போது திருவையாற்றைச் சேர்ந்த காராளசிங்கம் பிரகலாதன் (வயது - 43) என்பவர் கொல்லப்பட்டார்.

வியாழக்கிழமை பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட விமானத் குண்டுவீச்சின் போது மாணவனான சதீஸ்குமார் (வயது-16) கொல்லப்பட்டார்.

நவரத்தினம் தவக்குமார் (வயது-32), மாணவியான பத்மநாதன் நிலோதினி (வயது-17), நாகரட்ணம் நவரூபி (வயது - 32), புஸ்பகரன் சாந்தினி (வயது - 34), இராசேந்திரம் யேசுதாசன் (வயது-29), மூன்று மாதக் குழந்தையான சிறினிவாசன் தமிழரசன், ஆறுமுகம் மகேஸ்வரி (வயது-45), மாணவியான பரமநாதன் தேவவதனி (வயது-18) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### வெள்ளை வானில் தமிழ் இ... நீர்கொழும்பில் கடத்தப்ப...

நீர்கொழும்பு குடாப்பாடு பகுதி... கும் புலேந்திரன் ரெக்ஸன் என்ற... டைய இளைஞர் வெள்ளை வானி... களால் கடத்தப்பட்டுள்ளார் எனத்... கப் படுகின்றது.

யாழ்.சாவகச்சேரியைப் பிறப்பி... நீர்கொழும்பு குடாப்பாடு பகுதி... வருமான இவரை கடந்த செவ்வ... இரவு 8.30 மணியளவில் பொ... தரித்த ஒருவரும், மேலும் நால்... ளைவான் ஒன்றில் வந்து வி... அழைத்துச் செல்கின்றனர் எ... திச் சென்றுள்ளனர் எனக் கூற...

இச்சம்பவம் தொடர்பா... தாயார் நீர்கொழும்பு பொலி... கண்காணிப்புக் குழுவிடமு... செய்துள்ளார்.

### நாச்சிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்களை அடுத்து நாச்சிக்கு... மையாக படையினர் வசமானது.

விடுதலைப்புலிகளின் முக்... யோகப் பாதை இதன் மூலம் மூ... விட்டது. இந்தியாவில் இருந்து ... களை எடுத்து வருவதற்கு இந்... யையே கடற்புலிகள் பயன்படு... தனர்.

நாச்சிக்குடா படையினரால் ... றப்பட்டதால், மேற்குப் பகுதியி... புலிகளின் ஆதிக்கம் முடிவுக்கு... ளது- என்று மேலும் தெரிவிக்கப்...

அதேவேளை-

அக்கராயன்குளம், வன்னே... பகுதியின் நிலைகளைப் பலப்... வரும் படையினர் தேடுதல்களை... வருகின்றனர்- என்றும் இராணுவ... மையகம் மேலும் அறிவித்துள்ள...

### வன்னி சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்...)

இலங்கை இராணுவத்தின் தாக்... கடந்த சில மாதங்களாக மிகவும்... துள்ளன. குறிப்பாக வான்வழித் ... களும் அதிகரித்துள்ளன. இதன... பாவித் தமிழர்கள் ஏராளமாகக்... லப்படுகின்றனர். கிளிநொச்சி மருத்து... யும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. மனைகளில் போதிய படுக்கை வச... நோயாளிகள் மருத்துவமனை வளா... தரையில் படுக்கும் அவலநிலை...

மலேரியா, வாந்திபேதி, விஷ... சல் உள்ளிட்ட நோய்கள் அதிகரித்து... றன எனச் செய்திகள் வெளிவரு... பாம்புக்கடியால் ஏராளமானோர் இறந்... தொற்றுநோய்களும் மழை காலத்... படும் நோய்களும் அதிகரித்துள்ள...

ஏராளமான குழந்தைகளும் பே... தாய்மார்களும் சொல்லொணாத்... துக்கு ஆளாகியுள்ளனர். குழந்தை... கும் பேறுகாலத் தாய்மார்களுக்கு... பூசிகளைக்கூடப் போட முடியவி... போதிய மருந்துவ வசதிகள் இ...

போதிய மருந்துப் பொருள்... மருத்துவ வசதிகளும் இன்றிப் பே... பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ... ளாகவுள்ள தமிழர்கள் பாதிக்கப்பட்டு... அடிப்படை மனிதஉரிமையான ம... வசதிகளின்றி அவதிப்படும் த... ளுக்கு மருத்துவ உதவிகளை நே... வழங்க சமூக சமத்துவத்திற்கான ... கள் சங்கத்தைச் சேர்ந்த டாக்ட... மருத்துவக்குழுவினரும் தயாராக உ...

MARSHA SYSTEMS (PVT)LTD

MS 1000
1.8 GHz celeron Processor
Asus P5GC Mx1333 Board
1 GB DDR-II KingSton
160 GB SATA HDD
15" SAMSUNG
ATX cabinet (450w)
Multimedia Key Board
Optical Mouse
DVD writer (Sony)
39,000/-

MS 2000
2.2 GHz Duol Core Processor
Asus P5GC Mx1333 Board
1 GB DDR-II KingSton
160 GB SATA HDD
15" SAMSUNG
ATX Wbinet (450w)
Multimedia Key Board
Optical Mouse
UPS (DCP Auto Shutdown)
DVD writer (Sony)
48,000/-

MS 3000
2.2 GHz Duol Core Processor
Asus P5GC Mx1333 Board
1 GB DDR-II King Ston
160 GB SATA HDD
17" ViewSonic (CRT)
ATX cabinet (450w)
Multimedia Key Board
Optical Mouse
UPS (DCP Auto Shutdown)
DVD writer (Sony)
51,000/-

MS 4000
2.53 GHz Core 2 Duo Processor
Asus P5GC Mx1333 Board
1 GB DDR-II KingSton
160 GB SATA HDD
17" ViewSonic LCD
ATX cabinet (450w)
Multimedia Key Board
Optical Mouse
UPS (DCP Auto Shutdown)
DVD writer (Sony)
61,000/-

Printer (HP 1005) - 13900/-
Printer (HP 1460) - 4900/-
TV Card (Internal) - 3250/-
TV Card (External) - 3250/-
Woofer (2 in 1) - 1000/-
Woofer (2 in 1 ego) - 3500/-
Card Reader - 1400/-
64 Mb AGP VGA Card - 3600/-

NO - 74, KANNATHIDDY ROAD, JA...
T.P - 021 222 9418

படிவம்
க.பொ.த (உ/த) 2009 பரீட்சைக்கு முதல் தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாக தோற்ற விரும்பவர்கள் தம்மைப் பதிவு செய்வதற்கான படிவம் உண்டு.
Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
BIOLOGY
2009 A/L
DAY CLASS
BATCH - I Mon, Wed, Thu -6.45- 8.00
BATCH - II Sat, Sun - 9.30- 11.00
MCQ CLASS-Wed :- 2.30 - 4.30
By: S.PONTHIVAKARN

அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2008 சித்தியடை...
மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு.
எமது கல்வியகத்தில் கல்வி கற்றுச் சித்தியடை... மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 08.11.2... சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நடைபெ... மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்... அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்கு...

அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக்கல்லூரி வீதி யாழ்ப்பாண...
2009 இல் தரம் 4 (தற்போது தரம் 3)
மாணவர்களுக்கான வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன.
காலம் :- 05.11.2008 புதன் கிழமை பி.ப 3ம...
அனுமதிகளை 01.11.2008 சனிக்கிழமை முதல் செவ்வாய்க் கிழமை வரை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்.
இயக்குநர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2008 இ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.